Regd No. M. 4900. 16-பக்கங்கள்.

குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 29-1-1949 சனிக்கிழமை } மலர் 21.

ஆண்டவன் ஆலயத்தில்!

கன்னியர்கள் கருவிழியிற் கரும்மை யிட்டுக்
கன தனங்க ளிரண்டையும் நிமிர்த்துக்கட்டிச்
சொர்ணசர மிளிர்ந்திடக் கழுத்தில் பூட்டிச்
சொகுசாக லோலக்கைக் காதில்மாட்டி
வண்ணமிகும் பொட்டிட்டுப் பௌடர் பூசி
வாயுதட்டில் 'லிப்ஸ்டிக்கும்' மலர்க்கைவீசி
அன்னநடை போடுவதாண் காதலாலா!
ஆண்டவனின் காதலா! யறைகுவீரே?

2

பாதத்தின் கீழ்வேட்டிப் பரவச் செண்டின்
பாங்கான மணம்வீச பசும்பொன்மோதிரங்
காதமெங்கு மொளிவீசக் கையில் வாட்சுங்
ககனமெங்கும் சிகரெட்டின் புகைகள்தாவ
மோதலுடன் கூட்டத்தில் நுழைந்து பல்லோர்
முன்னிலையில் 'முணு முணுப்ப' ரிவர்களெல்லாம்
நீதிசே ராண்டவனி னன்பினாலா?
நீழ்விழி யரன்பாலா? நிகழ்த்துவீரே?

3

அடித்திடுவான் மணியோசை யதிரக்கோவில்
அம்உம்ஆம் என்றுசொலிச் செபிப்பான்வாயில்
பிடித்திடுவான் கற்பூரத்தட்டம் "பார்ப்பான்"
போடுவார் காணிக்கை 'போ போ' என்பான்
விடிவதற்குள் பணத்தையெல்லாம் வேசிக்காக
வீசிடுவான் விடிந்தபின் சேர்ந்தஅன்ப
னடலொளிசே ராண்டவ-னடிமையென்றோ?
யவளடிமை யென்றோ? நீ ரறைகுவீரே?

4

இப்புவியில் கடவுளின் அன்பைப்பேண
விதயத்தின் பூசையன்றோ வெய்தவேண்டும்
கற்குகையிற் றவஞ்செய்யாப் போலிவேடக்
கசடர்களைப் பணிவதென்ன கருத்தினாலோ!
மற்புயத்தா! செந்தமிழா! மடமையென்னும்
மயக்கம் விட்டெழுந்திருடா!! பார்ப்பார்செய்த
சொற்றிருட்டைக் கண்டுவிட்டோம் சுகத்தைக்கண்டோம்
துள்ளியெழுந் துன்பணியைத் தொடங்குவாயே.

—இரட்டையர்

பெண்கள் பகுதி

கோட்டங்கள் குலைந்தது யாரால்?

(வேலூர் தோழியர் லட்சுமி)

ஆடை அலங்காராதிகளுடன் அலுப்புச்சலிப்பின்றி ஆலயங்களுக்குச் செல்வதில் ஆவல் கொண்டுள்ள தோழியர்களே! ஆரியரின் வருகைக்கு முன்பு ஆலயங்களில் இத்தகைய பித்தலாட்டப் பிரசாரம் நடந்திருக்குமென்று கருதுகிறீர்களா? இன்று ஆலயங்களில் நடக்கும் அக்கிரமங்களைக் கண்கூடாகக் கண்டிருந்தும், கோவில்களுக்கு ஏன் கூட்டங்கூட்டமாய்ச் செல்லுகிறீர்கள்?

சற்று நாம் யோசித்துப் பார்த்தோமேயானால் இன்று கடவுளின் இருப்பிடங்கள் என்று சொல்லும் ஆலயங்கள்—அன்றையக்கலைக்கோட்டங்கள் நம் கண்ணெதிரில் காட்சி அளிக்கும்!

நம் முன்னோர்கள் தொழிலுக்கு வணக்கம் செலுத்தியவர்கள் என்ற உண்மையை அறிந்துதான், பாரதியார் தம் பாடலில், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடியுள்ளார்.

கலைக் களஞ்சியமாகிய நம் திராவிடத்தில் சிற்பக்கலை சிறப்புற்றிருந்த தென்பதின் அறிகுறியாக, இன்று ஆரியரின் பிடியில் சிக்கி அழிக்கப்பட்ட கோட்டங்களும், இன்று வரை பொலிவுடன் திகழ்ந்து வரும் பொங்கல் திருநாளுமே அவருடைய பாடலுக்குப் போதிய எடுத்துக் காட்டாகும்.

நம் முன்னோர்களில், சிற்பிகள், அன்று தங்களால் செதுக்கப்பட்ட சிலைகளுக்கு அழகிய சிற்பக் கோட்டங்கள் அமைத்து மகிழ்ந்தனர். அன்று சிலையைக் கலை என்று வணங்கியிருப்பாரேயன்றி கடவுள் என்று வழிபட்டிருக்க மாட்டார்கள். அன்று ஆலயங்களில் ஆரியப் பூசாரி ஆதிக்கம் செலுத்தியிருக்க மாட்டான். ஏன் ஆரியரே அடி எடுத்து வைக்காத காலம்! அதற்குப்பதிலாக அவ்வற்புதச்சிலையின் சிருஷ்டி கர்த்தாவான சிற்பி தன் வாழ்நாளில் செய்து முடித்த சிலைகளின் உயர்வைக் கண்டு களித்தபடி சிலையின் அடியில் அமர்ந்திருப்பான். கலையின் உயர்வைக்காண வரும்மக்கள் சிலையைக் கண்டு களித்து, சிற்பியை வாழ்த்தி வணங்கி, அவனுடைய பிழைப்பிற்குத் தங்களால் இயன்ற பொருளுதவி செய்திருப்பார்கள்.

இத்தகைய நேர்மையான முறையில் தான், அன்றையக் கலைக் கோட்டங்கள் திகழ்ந்திருக்கலாம்—திகழ்ந்திருக்க வேண்டும் என்பது என் கருத்து.

வளப்பம் மிகுந்த நம் நாட்டிற்குப் பிழைக்க வந்த அச்சிறு கூட்டத்தினர் பசப்பு வார்த்தைகளால் பெருங்குடியினராகிய நம்மை மயக்கி அறிவை அடிமைப் படுத்தி விட்டனர். நெஞ்சினில் வஞ்சனையற்ற நம் முன்னோர்கள் ஆரியரின் சூழ்ச்சியை அறிந்தாரில்லை.

கலைக் கோட்டங்களைத் தமது கள்ள வார்த்தைகளால் கடவுளின் இருப்பிடங்கள் என்று கூறி மயக்கினர். ஒரு நாட்டிற்கு ஓராயிரம் கடவுள்களா— ஏன் ஒரு லட்சம்? கணக்கற்ற கடவுள்களைக்கூடத் தம் தந்திரத்திறமையால் உண்டாக்கி விடுவார்கள்—விட்டார்கள்!

'பிடித்துவைத்தால் பிள்ளையார், விட்டெறிந்தால் சாணி'' என்று மாட்டு மலத்தை எல்லாம் கடவுள்களாக்கும் அவர்கள் எதைத்தான் செய்யத் தயங்குவார்கள்?

அழகிய சிலைகளைப் புழுக்கம் நிறைந்த இருட்டறைக்குள் அடைத்து, அச்சிலைகளுக்குள்தான் சர்வவியாபியான கடவுள் புகுந்து கொண்டிருக்கிறார் என்றும், அவரிடம் வரம் பெற்று வந்தவர்கள் தாங்கள் என்றும், அவர்களுடைய சுகவாழ்விற்காக, உழைத்துச் சேர்க்கும் நம் பொருளை, பாடுபட்டும் பஞ்சைகளாக நாம் இருந்துகொண்டு, பார்ப்பனப் பூசாரிகளுக்குக் காணிக்கை செலுத்த வேண்டுமென்று மக்கள் நம்பும் படியாகக் கூறி வெற்றி கொண்டனர்.

அதோடு அவர்கள் திருப்தி அடைந்து விடவில்லை. தந்திரசாலிகளான அவர்கள் அறிவிற்கு ஒவ்வாத பலகதைகளைப் புனைந்து, புனைந்த கதைகளுக்குப் புராணம் என்று பெயர் வைத்து, அக்கதைகளை மக்களின் மனதில் வலியப் புகுத்தினர். மக்களின் உள்ளத்தில் புகுந்த கதைகள் அப்படி இப்படி அழிந்து விடாவண்ணம், 'புராணங்களைப் பழிக்காதே! பழித்தால் பாவம் நேரிடும்' என்று கூறி நரகலோகத்தை மக்கள் முன்பு படம் பிடித்துக் காட்டினர். பயந்து விட்டனர் பாழும் நரகலோகம் நமக்குக் கிட்டி விடுமோ என்று நம் முன்னோர்கள். ஆதலால் ஆரியரின் தந்திர வார்த்தைக்கு இதுகாறும் மறுப்புரைக்காமலே இருந்தனர்.

தாங்கள் புனைந்த கதைகளுக்கு ஏற்றாற்போல் கடவுள்களின் பல அவதாரங்களையும் செதுக்கும்படி நம் சிற்பிகளுக்குக் கட்டளை பிறந்தது. நம் கையால் கடவுள் உருவாகப் போகிறாரே என்று மெய் மறந்து விட்டனர் சிற்பிகள். ஆரியரின் வருகைக்குப் பின்புதான் ஆலயங்களில் விஷ்ணு, சிவன், லிங்கம், ஆஞ்சனேயர், விநாயகர் போன்ற பல உருவங்கள் உண்டாகி இருக்கவேண்டுமென்பது என்கருத்து.

தங்கள் வலைக்குள் கோட்டங்களைப் பிடித்துக் கொண்ட பின்பு தான், ஆரிய ஆதிக்கம் நம் நாட்டில் நன்றாக வேரூன்றி இருக்க வேண்டும்.

திராவிட மன்னர்களால்கூட விரட்ட முடியாத ஆரியத்தின் இரும்புப் பிடியிலிருந்து வெளியேறி, நமக்குச் சிந்தனை அறிவை யூட்டிய சாக்ரடிசாகிய நம் பெரியாரை இந்நாடு என்றென்றும் மறவாது. அவர் காலத்தில், நாம் வாழ்வதற்கே பெருமைப்படவேண்டும்.

கோவில்களுக்குச் செல்லும் தோழியர்களே! கற்சிலைக்குள் கடவுள் எப்படிப் புகுந்துகொண்டிருப்பார்? அப்படித்தான் இருந்தாலும் இருட்டறையாகிய மூலஸ்தானத்திற்குள் ஆரியரின் பிரியம்போல் ஏன் இருக்கவேண்டும் என்று நாம் அக்கடவுளிடம் ஒரு நாளாவது கேட்டிருப்போமா! கேட்டால் மட்டும் நாம் எதிர்பார்க்கும் பதில் கிடைக்கப்போகிறதா? அதுதான் கற்சிலை என்று நம் கண்களுக்குப் புலனாகிறதே!

'சுவாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடான்' என்று கூறுவதிலிருந்தே உண்மை விளங்கவில்லையா? ஆரியப் பூசாரியின் கைப்பாவைதான் கடவுள் என்று நம் கருத்திற்கெட்டிவிட்டதல்லவா?

பிழைக்க ஒரு சிலரால் கோவில்களில் இறக்குமதிசெய்யப்பட்டிருப்பது அனைத்தும், இமிடேசன் கடவுள் என்பதை உணரவேண்டும். கடவுள் பெயரைக்கூறி நடத்தும் இவ்வியாபாரத்தில் அவர்களுக்குப் பெருத்த லாபம்!

கற்சிலைகளை உண்மைக் கடவுள் என்று நம்பி நம் குறையை அதனிடம் கூறிப் பொருள்விரயம் செய்வதை இனி அடியோடு ஒழித்துவிடவேண்டும். பார்ப்பான் கூறியதற்காக கற்சிலையைக் கடவுள் என்று நாம் ஒப்புக்

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

காட்சி. 27.

[இராசன் வீடு]

உறுப்பினர்:- இராசன், சப் இன்ஸ்பெக்டர், போலீஸ், வேவா.

கதை அமைப்பு:- [இராசனைப் போலீஸார் கைது செய்கின்றனர்; வேவா அது சமயம் அங்கு தோன்றி இராசனுக்கு ஆறுதல் கூறிப் போகிறான்.]

இராசன்:- [வீட்டுத் திண்ணையில் கவலையோடிருக்கிறான்.]

சப்இன்ஸ்பெக்டர்:- [பிரவேசித்து] ராஜன் யூ ஆர் அரெஸ்டட்! டேய்! 8104 போடுடா விலங்கை?

8104:- [இராஜன் கையில் விலங்கை மாட்டுகின்றான்.]

இராஜன்:- சார்! எனக்கேன் விலங்கு? நான் என்ன குற்றம் செய்தேன்?

சப்இன்ஸ்பெக்டர்:- கொலைக் குற்றம்!

இராஜன்:- [வியப்போடு] கொலையா...? யாரை?

வேவா:- [திடீரென்றுதோன்றி] விஸ்வனை!

இராஜன்:- வேவா! விஸ்வன் கொலையுண்டானா? எப்படி? யார் செய்தது? என்னையேன் போலீஸார் கைது செய்யவேண்டும்?

வேவா:- நீ தானேப்பா விஸ்வனை 'ரிவால்வரா'ல் சுட்டு விட்டு ஓடிப் போனவன்?

இராஜன்:- அடச் சண்டாளப் பாவி! சிநேகிதத்துரோகி! நீ பார்த்தாயா நான் விஸ்வனைச் சுட்டதை? ஏன்டா இப்படி அபாண்டமாகப் புளுகுறே?

சப்இன்ஸ்பெக்டர்:- டேய்! நிறுத்தடா! உன் படபடப்பெல்லாம் தெரியும்!

வேவா:- சப் இன்ஸ்பெக்டர் சார்! கொஞ்சம் நிதானமாகவே பேசுங்கள்...என்னப்பா ராஜா! இப்படி எல்லாம் நானேதான் சொல்வதாக நினைத்து விட்டாயோ? இதோ இந்தப் பேப்பரைப் பார்த்துத் தொலை...

இராஜன்:- ஆங்! பேப்பரில் நான்தான் கொலை செய்தேன் என்று எழுதியிருக்கா?

வேவா:- இல்லா விட்டால், எனக்கெப்படித் தெரியும்?

இராஜன்:- வேவா! அதைநீகூட நம்பி விட்டாயா?

வேவா:- நம்பினால் நானேன் இங்கு வருகிறேன்? உம். எனக்கு அப்பவே தெரியும் இப்படி எல்லாம் வரப்போகிறதென்று! நீ பெரிய இடத்துப் பொல்லாப்பில் போய்ச் சிக்கிக் கொள்வாய் என்று தெரியாமலா, நான் துப்பறியும் உத்தியோகத்திற்கு மனுப்போட்டிருப்பதாக முன்னமேயே சொன்னேன்?

இராஜன்:- வேவா! என்னைக் கிண்டல் பண்ணுவதற்கு உனக்கு இதுதான் சமயமா...?

வேவா:- ராஜா! அஞ்சாதே! இப்போது, நான் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தன். என் உயிரைக் காணிக்கையாகக் கொடுத்தேனும் உனக்காக உண்மையைக் கண்டுபிடித்து நிரூபிப்பேன்! நீ தைரியமாக இந்த சப்இன்ஸ்பெக்டர்பின்னே செல். நான் வருகிறேன்.
[என்று கூறிப் போகிறான்]

சப் இன்ஸ்பெக்டர்:- அட்டே...! பகாத் துப்பறியும் புலி இவன்! போடாபோ...! இவனைப் போல் வீரப்பேசிய எத்தனையோ பழம் பெருச்சாளிகளை எல்லாம் இந்தப் பாகட்டுக்குள் போட்டு வைத்திருக்கிறேன்! இவன் நேற்று வந்த சுண்டெலி! சிண்டைப்பறி கொடுத்து விட்டுப் போகத்தான் பயல் அனாவசியமாக நம் விஷயத்தில் தலையிட்டிருக்கிறான்! உம். இவனையும் பார்க்கிறேன் ஒருகை.

டேய் 'டார்பூல்!' வேடிக்கையா பார்க்கிறே...? கொண்டு போடா இவனை.

காட்சி 28.

[வீதி.]

உறுப்பினர்:- சின்னாயி, சின்னான், வேவா.

கதை அமைப்பு:- [வேவா முதன் முதலாகச் சின்னானிடம் பேசி உளவறிகிறான்.]

சின்னான்:- [தன்முன்னேசெல்லும் சின்னாயிக்குப் பின்னாலே உல்லாசமாகப் போய்க் கொண்டிருக்கும்போதே, பொடிப்போடுவதற்காகச் சற்று நிற்கிறான்.]

வேவா:- [சின்னான் பொடிப் போட்டு முடிந்து மீண்டும் புறப்படப்போகும் சமயத்தில்.] தம்பி! தம்பி...!! தம்...பி...!!!

சின்னான்:- [சின்னாயியின் கவனம் மறந்து திரும்பி] யாரை...? என்னையா கூப்பிடுறீங்க?

வேவா:- ஆமாம்...! ஏன்! காது செவிடோ...?

சின்னான்:- என்காது செவிடுமில்லை! நான் உங்கள் தம்பியுமில்லை!! என்பெயர் சின்னான்; தெரியுதுங்களா?

வேவா:- ஓகோ! உன் பெயர் சின்னானா.........! சரி சரி. சின்னான்! உன் சின்ன எசமான் சௌக்கியமா இருக்காரா?

சின்னான்:- என்னா? சின்ன எசமானா? ஊங்......! இருப்பாரு மேலோகத்தில்?

வேவா:- மேலோகத்திலா? அது எங்கேப்பா இருக்கு.........?

சின்னான்:- மேலேதானுங்க...! வானத்துக்குள்ளே இருக்கும்....

வேவா:- ஓகோ! விஸ்வன் எங்கேயாவது ஆகாய விமானத்தில்

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

காதலா.........?

போட்டி

எண் 7.

“நள தமயந்தி,, என்ற தமிழ்ப்படக் காட்சி ஓடிக்கொண்டிருந்தது. அன்று அவ்வளவு கூட்டம் இல்லை. வெளியே சிறுமழை தூறிக்கொண்டிருந்தது. தரைப் பெருமக்கள் கதையைச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள். பின் பகுதியில் ஒரு சிலரே காணப்பட்டனர். கடைசியாக இருவர் ஆணும் பெண்ணுமாக அருகருகே சாய்வு நாற்காலியில் இருந்தனர். காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக மாறிக்கொண்டிருக்க உடையலங்காரத்திலும், பெண்களின் நடையலங்காரத்திலும், பாட்டுக்களிலும், அதைத்தொடர்ந்த நாட்டியங்களிலும், பசுந்தமிழ்ப் பேச்சுக்களிலும், இயற்கை எழில் காட்சிகளிலும் மக்கள் மனம் சிக்கிச் சொக்கிப் போயிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் கதைக்கும், கருத்துக்கும் உள்ள பொருத்தத்தை யாருமே எண்ணிப் பார்க்கவில்லை. எல்லாம் சுழன்றோடும் அந்தப் படமாகவே யிருந்தது அவர்களுக்கு! மதுவைக் குடித்துவிட்டால் கிண்ணமே உலகமாகத் தெரிகிறதல்லவா அது போல!

படம் முடிந்தபின்னும்கூட யார் இதையெல்லாம் சிந்திக்கிறார்கள். சில பேச்சுத் துணுக்குகள், சில பாட்டு வரிகள், சில காட்சிகள் தவிர மற்ற யாவும்தான் மாந்து—மறைந்து போய் விடுகின்றனவே. எல்லாவற்றையும் மறந்து வானிலே பறந்துகொண்டிருந்த மனிதன்,குடியின் வேகம் குறைந்ததும் பழைய ‘கந்தனா’கி விடவேண்டியதுதானே!

முதலாளிகளின் பணத்தாசை, படமாகச் சுழன்று கொண்டிருந்தது. தமயந்தி தன் கணவனை எங்கிருப்பினும் அடைந்துவிடவேண்டும் என்ற ஆசையால், தனக்கு இரண்டாம் சுயம்வரம் நடப்பதாக அறிவிக்கிறாள். அதைக் கேட்ட அயோத்தியை ஆளும் இருதுபன்ன மன்னன் சுயம்வரத்திற்கு வருகின்றான். அவனிடம் தேர்ப்பாகனாக இருக்கும் நளனும் மாற்றுருவுடன் வந்திருக்கிறான். தமயந்தி தன்தோழியை அனுப்பி,அப் பாகனை நோட்டம் பார்க்கிறாள்...காட்சிதொடர்கிறது...

—அய்யா! நீர் யார்? உம் வேலை என்ன?

—நான் அயோத்தியை ஆளும் இருதுபன்னனின் தேர்ப்பாகன். எனக்கு நெருப்பின்றிச் சோறாக்கவும், பாலைவனத்தில் உண்ணுதற்கேற்ற தண்ணீர் தரவும் முடியும்...

“என்ன! எங்கள் நளமகாராஜனுக்கே உரியவித்தைகள் அல்லவா இவை! நீ அவரிடமிருந்து இவற்றைக் கற்றுக் கொண்டாயா... அவர் எங்கே இருக்கிறார்!

“அவரைப் பற்றிய எதையும் நான் அறியேன் அம்மா! அவரிடம் கற்றதும் இல்லை. ஆனால்...ஆனால் உங்கள் தமயந்தி கற்புக்கரசி என்று போற்றப் படுபவள், இவ்வாறு வேறொரு கணவனைப்பெறஇரண்டாம்சுயம்வரம் நடத்துவது வெட்கக்கேடல்லவா...

“வெட்கமாம். கேடாம்! நிதானமாய்ப் பேசும் அய்யா. எங்கள் தமயந்தி ஒன்றும் கற்பை இழக்கவில்லை. காமத்திற்கு அடிமையாகவும் இல்லை. எத்தகைய துன்பம் நேரிடினும், உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தாலும், உதய சூரியன் மேற்கே தோன்றினாலும் எங்கள் பாரத நாட்டுப் பெண்கள் தங்கள் கற்பிலேமாசுபடச் சம்மதிக்கமாட்டார்கள். உயிரைக் கொடுத்தும் மானத்தைக் காப்பார்கள். அந்த மங்கையர்க்கரசிகளின் வழிவந்தவள் எங்கள் தமயந்தி...(தரைப்பெருமக்களின் கைதட்டல்)

“அப்படியானால் தமயந்தி...”

“தன் கணவனை அடையவே இத் தந்திரம் செய்தாள்...”

*　　*

கைதட்டிய மக்கள் படத்திலே தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணராவ் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். பிறகு ஏதோ எண்ணியவர் போல படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். பக்கத்தில் லட்சுமி உட்கார்ந்திருந்தாள். பொருத்தமான ‘ஜோடி’ தான். ஆனால் கணவனும், மனைவியும் அல்ல. அவர் சீமான், வக்கீல்! வயது முப்பத்தைந்துக்குமேல் இருக்கும். அவள் வேலைக்காரி. கட்டழகு, குறுகுறு வென்ற கண்கள், படர்ந்தமுகம், நிமிர்ந்ததோற்றம்...பவள இதழ்கள்... அவளின் முன் தலைமயிர் சில மின்சார விசிறியின் காற்றிலே ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன. எவ்விதச் “சரிசெய்தலும்” இல்லாத இயற்கை அழகிதான்... இருந்து என் செய்ய. மண்குடம் சோறு பொங்கப் பயன்படலாம்...மண், பொன்னாக மாற முடியுமா...

அவள்படம் பார்க்கவில்லை. பார்க்க வேண்டிய அவசியமும் ஆவலும் இல்லை. அதற்கேற்ற நிலைமையிலும் அவள் இல்லை. அன்று தன் எஜமானரின் நண்பருக்காக வந்திருந்தாள் படம் பார்க்க! இல்லை அது கூடத்தவறு. அவருக்காக அல்ல—அவளுக்காகவே, அவளின் கடமையை நிறைவேற்றுவதற்காகவே வந்திருந்தாள். திரையிலே படம் ஓடிக்கொண்டிருந்தது. அவள் மனத்திலும் ஒருபடம் ஓடிக் கொண்டிருந்தது. அது எங்குமே இல்லாத புதிய படம் அல்ல. எங்கும் நடக்கின்ற பழைய படந்தான் அது... ஆனால் யாரும் பார்க்காதது நேரமில்லாததாலோ, கவனமில்லாததாலோ!

*　　*

லட்சுமி, வயது முதிர்ந்த கிழத்தாய் தந்தையர்க்கு ஒரே மகள். பருவமடந்தை! ஏழ்மை தவழும் குடிசையிலே அவள் இளமை வளர்ந்தது! பிறர்க்கு வேலை செய்து, உடலால் உழைத்து வயிற்றை நிரப்புவதுதான் அவர்கள் குடும்பத்தில் இருபரம்பரையாக நடந்து வரும்வேலை, சொத்து சுகம் எல்லாம்! நிலபுலன்கள் இல்லை. உற்றார், உறவினரின் தொடர்பும் அற்றுப் போயிற்று. உலகத் தொடர்பும் உழைப்பென்ற நூலோடு ஒட்டி இருந்தது...அதுவும் அறுந்து விட்டால்...

*　　*

லட்சுமி பெயருக்கேற்ற அழகிதான். தங்கத் தட்டிலே பதித்துப் பார்த்து மகிழ வேண்டிய வயிரந்தான்! ஆனால் குப்பைக்குழிக்கும், கோபுர உயரத்திற்கும் ஏணி வைத்து ஏற முடியுமா? கிழத்தாயும் தந்தையும் உழைத்தலுத்துப் போய்விட்டார்கள். அவர்களின் உடல் நோய்வாய்ப் பட்டதால் படுத்த படுக்கையாகித் தவிக்கின்றார்கள். குடும்பத்தை ஆற்ற, தேற்ற யாரும் இல்லை! லட்சுமிதான் பொறுப்புடையவள் ஆனாள். கடமையை உணர்ந்தாள்...

அடுத்த தெரு வக்கீல் கோபால் ராவ் வீட்டில் லட்சுமிக்கு வேலை. பல மாதங்கள் கடந்தன. பசியாற உணவுண்டு மகிழ்வதிலேயே “பூலோகசுவர்க்கத்தை” கண்டது லட்சுமியின் குடும்பம். ஆனால் லட்சுமியின் அழகு அதிலும் மண்ணைத்தூவியது.

பெண்கள் அழகை ஆயுதமாகப்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

★ திருக்குறட் செல்வம்! ★

செல்வம், செல்வம் என்று உலகம் முழுவதும் அதிலேயே மூழ்கிக்கிடக்கிறது. பொருட்செல்வந்தான் இவ்வுலகிற்குத் தாயும், தந்தையும், நட்பும், உறவும், கணவனும், மனைவியும், துணையும், கடவுளும்ஆக இருந்து வருகின்றது. செல்வமில்லாதவனைக் கணவனாய் மதிக்க மனைவி மறுக்கிறாள். பணமில்லாத குடும்பத்தில் பிறந்த பாவை, பதிவிரதையேயானாலும் உலகம் பழிக்கிறது. தந்தையைக்கூடத் தனயன் பணத் தாசிலேதான் மதிப்பிடுகிறான். தாய்கூட மகனை அதனாலேதான் நிறுத்துப்பார்க்கிறாள். கடவுளைப்போற்றும் மக்களுங்கூட பணத்தைப் பெருக்கி, மேலும் பெருக்கக் கடவுளை வேண்டிப், பணத்தாலேயே அவரை வழிபடுகின்றார்கள். இவையெல்லாம் கண்கூடு. அதுமட்டுமல்ல, கைப்புண்! பணத்தை மதிக்க வேண்டுவதுதான். ஆனால் அதற்கும் அளவு வேண்டுமல்லவா? எத்தகைய செல்வத்தை எவ்வெவ்வாறு மதிப்பிடவேண்டும், முன்னோர்களின் கருத்தென்ன? நாம் கையாளவேண்டிய முறையென்ன? பார்க்கலாம்.

செல்வமும் வள்ளுவரும்!

முதலில் செல்வம் என்பது செல்வாம், செல்வோம், செல்வேம் என்ற சொற்களைப்போல, "போவோம்" என்ற பொருளில் அமைந்த, தன்மைப்பன்மை வினைமுற்றுச்சொல். இது என்ன இலக்கண ஆராய்ச்சியோ என்று வெறுத்துவிடாதீர்கள். இதே வினைச்சொல் பெயர்ச்சொல்லாக மாறும்பொழுது பொருள், உடைமை, நிதி, பணம் முதலிய பொருள்களை உணர்த்துகின்றது. செல்வம் என்ற சொல் சென்று, சென்று சுழன்றுகொண்டிருக்கும் "புல்நுனிமேல்,நீர்த்துளிபோலும்" நிலையற்ற தன்மையை, அச்சொல் ஒலி, நம் காதில் கேட்ட அளவிலேயே உணர்த்திவிடுகின்றது. பொருளுக்கும்,கருத்துக்கும்ஏற்றவகையில் தக்க காரணங்களுடன் சொற்களை அமைத்துத் தமிழ்மொழியை வளப்படுத்தி இருக்கும் நம் முன்னோர்களின் செயல், இந்நேரத்தில் நாம் நினைந்து மகிழ்ச்சி அடைய வேண்டியவற்றில் ஒன்று. சொல்லிலேமட்டும் அல்லாமல், நமது முன்னோர்கள் பல இடங்களிலும் செல்வத்தின் நிலையின்மையை மட்டும் கூறி, விளக்கிச் சென்றுள்ளார்கள். ஆனால் உலகப் புகழ்பெற்ற வள்ளுவர் செல்வத்தைப்பற்றிய குணம், குற்றம் யாவற்றையும், நமக்கு விவரித்துக் காட்டி, அழியாச்செல்வங்கள் யாவை என்பதையும் எடுத்துக் காட்டி, தீயவழியில் செல்லாது நல்வழியில் முன்னேறும்படி நமக்கு அறிவுறுத்திச் சென்றிருக்கின்றார். எப்படி?

நிலையற்றதாயினும் நிலைநிறுத்துவது அதுதான்!

செல்வம் நிலையற்றது! கூத்தாடும் அரங்கிலே காட்சி மாறுவது எப்படியோ, அப்படியேதான்

அண்ணல்.

செல்வமும் மாறுகிறது. கூத்துப் பார்க்கக் கூட்டம் வருவதும், போவதும் போலச் செல்வமும் வந்து, போகும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே
பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.
—என்பது வள்ளுவர் வாக்கு.

இவ்வாறு செல்வம் நிலையற்றது என்பதற்காக, அச்செல்வத்தைத்தேடாதே, மதியாதே என்று வள்ளுவர் கூறவில்லை. நிலையற்றதுதான்—அதேநேரத்தில் இன்றியமையாததும் அதுதான் என்கிறார் வள்ளுவர். செல்வம் இல்லாதவர்க்கு இவ்வுலகில் நல்வாழ்வு இல்லை. புகழ் இல்லை, சாதாரண மதிப்புக்கூட இல்லை.

அருளில்லார்க்கு அவ்வுலகம்
இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

என்ற குறளில், பொருள் இவ்வுலகிற்குவேண்டும்; அருள் அவ்வுலகிற்கு வேண்டும் என இரண்டையும் சேர்த்துக் கூறுகிறார் வள்ளுவர். அறமும், இன்பமும் வளரத் துணையாக இருந்து உதவுவது செல்வந்தான். அன்பு பெற்றெடுத்த அருள் என்ற குழந்தை, செல்வம் என்ற செவிலித்தாயின்றி வாழ முடியாது என்பதும் வள்ளுவர் கருத்து. பகைவரிடத்துள்ள பகைமை உணர்ச்சியை அறவே ஒழித்து, அப்பகைவரையும் நம்முடன் நட்பு கொள்ள வைக்கும் ஆயுதம் எது என்றால் அது ஒரு கூரியவேல்—கொல்லன் பட்டறையிலே உள்ளது அல்ல—நல்வழியில் ஈட்டிய செல்வமெனும் கூரியவேல் தான் அது!

இன்னும், இரப்பவர்க்கு ஈதல் வேண்டுமா? இன்பம் பெற வேண்டுமா? நினைத்தகாரியத்தை முடிக்க வேண்டுமா? கனவு, நனவாகவேண்டுமா? தாழ்வாக மதிக்கப்படுபவனும், உயர்வாக மதிக்கப்படவேண்டுமா? எது வேண்டும்? அல்லது எது வேண்டாம்? வேண்டுவனவற்றை ஆக்கவும், வேண்டாதவற்றை அழிக்கவும் வல்லது செல்வந்தான். அதற்கு ஒப்பில்லை என்கிறார் வள்ளுவர். "பொருளற்றவரைப் பொருளாகச் செய்யும்" இந்தச் செல்வம் என்ற "பொருள் அல்லது இல்லைப்பொருள்" என்பதும் வள்ளுவர் உள்ளமாகும்.

செல்வம் நிலையற்றது எனினும் இன்றியமையாதது தான். சரி, அதை எந்தெந்த வழிகளில் அடையலாம். எவ்வெவ் வழிகளில் அடையவேண்டும் என்பதையும் பார்ப்போம்.

செல்வத்தைச் சேர்க்கும் வழி?

செல்வம் சேர்க்க எத்தனையோ வழி உண்டு. கள்ள வியாபாரம், கொள்ளையடிப்பது, லஞ்சம் பெறுவது, வஞ்சித்துவாங்குவது. இப்படி எத்தனையோ வழிகள்! ஆனால் இவை தீமை பயப்பவை. இதைச் சாதாரண மனிதத் தன்மையுள்ளயாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். சிலபேரிடம் மட்டும் உதடு சொன்னாலும், உள்ளம் இந்தக் கருத்தை ஒத்துக் கொள்ளாது. அவர்கள் கிடக்கட்டும். நாளை அவர்கள் மனமே அவர்களைச் சுடும். அதைபற்றியல்ல நாம் கருதவேண்டியது. எப்படி, எப்படி முயன்று நல்வழியு

டன் செல்வம் ஈட்டலாம்என்பதே நாம் அறிந்துகொள்ளவேண்டியது. வாணிகமானால், சமன் செய்து சீர்தூக்கும் தராசாக உள்ளத்தை வைத்துக் கொண்டு, பிறர் பொருளையும்தன்பொருள்போலப்பேணி வாணிகம் செய்யவேண்டும். பிற தொழில் அனைத்திலுமே அன்போடும், அருளோடும் பொருள் ஆக்கவேண்டும். மற்ற வழிகளில் ஈட்டும் பொருள் நமக்கும் பயனற்றது, நாட்டிற்கும் தீங்கிழைப்பதாகும். இது வள்ளுவர் கருத்து.

செலவு செய்யும் நெறி !

சரி. நேர்மையில் நின்று நீதிவழி நடந்து பொருளென்ற எல்லையை அடைந்தேன். சேர்த்த பொருளை பூட்டிவைப்பதா? செலவழிப்பதெப்படி? என்று இத்தகைய எண்ணங்கள் நம் உள்ளத்தே எழுவது இயற்கை. இவைகளுக்கேற்ற பதிலையும் வள்ளுவர் தெள்ளத்தெளியச் சொல்லியிருக்கிறார். உண்மையை உறுதியாகச் சொல்லும் வள்ளுவரின் தன்மையை என்னென்று சொல்வது.

உன்னிடம் செல்வம் இருக்கிறதா? அப்படியானால் பூட்டிவைக்காதே. நீயும் நுகர். நன்றாக உண்டு, நன்றாக உடுத்து, நன்றாக வாழ்! அதுமட்டுமல்ல பிறர்க்கும் கொடு, பிறரையும் உண்ணச்செய், உடுத்தச்செய், வாழச்செய்! இது உன் கடமை என்று கட்டளை யிடுகிறார். ஆனால் லட்சம், லட்சமாக; கோடி கோடியாக அடுக்கி வைத்திருக்கும் ஆசை நிரம்பிய உள்ளங்கள் அந்தக் கட்டளையை ஏற்பதில்லை. பூட்டி வைக்கப், பூசைசெய்யப் பொன்னைப் பயன்படுத்துகின்றன. வள்ளுவர் இதை அறியாமலோ, உணராமலோ இல்லை. இத்தகைய உள்ளங்கள் இருப்பதைக் கண்டு அத்திரப்படுகிறார். கோபத்துடன் சொற்களைக் கொட்டுகிறார். ''அட, அறிவில்லாதவனே! உன்னிடம் கோடி, கோடி என்று அடுக்கிச் சொல்ல எத்தனை கோடிகள் இருந்தால் என்ன. அதை நீயும் பயன்படுத்தாமல், பிறர்க்கும் பயன்படச் செய்யாமல் பூட்டி வைத்திருக்கிறாயா? அவ்வாறு வைத்துக்கொண்டு உன்னையும் நீ செல்வன் என்று சொல்லிக் கொண்டு பிறரையும் அவ்வாறே சொல்லச் செய்து கொண்டு வாழ்கின்றாயா? சரி. அதோ, தெருவிலே போகிறானே அவனைப்பார். கையிலே திருவோடு, மெய்யிலே திருநீறு! ஆம். இந்தக்கோலத்தில் பிச்சை கேட்கிறான். ''இல்லையே'' என்று உன்னிடம் வந்து இரந்து கேட்கிறான். நீ—பணத்தைப் பூட்டி வைத்து பூசை பண்ணும் நீ-என்ன சொல்கிறாய்! அவனைவிட இரக்கமாகத் தாழ்வாக அவனிடம் என்னிடமும் இல்லையே, இருந்தால் தருவேனே! என்று சொல்லுகிறாய்! பொய் சொல்லுகிறாய்! நெஞ்சறிந்த பொய் சொல்லுகிறாய்! ஆனால் உங்கள் இருவரிடமும் இல்லை! செல்வமே இல்லை! சிறிதும் இல்லை. திருவோடு தூக்கித் தெருவெல்லாம் வலம் வரும் அவனுக்கும், திண்ணையிலே சாய்ந்து தினம் தினம் பணம் எண்ணி பத்திரப்படுத்தும் உனக்கும் வித்தியாசம் இல்லை! என்று.

''கொடுப்பதூஉந்
துய்ப்பதூஉம் இல்லார்க்கு
அடுக்கிய
கோடி உண்டாயினும் இல்''

என்பது அக்குறள். இக் குறளைப் படித்துணரும் தன்மை பெற்றால் எத்தனை கோடீசுவரர்கள், செல்வர்கள் என்னிடம் செல்வமே இல்லையா? என்று கேள்விக்குறி எழுப்பி, அதையே ஆச்சரியக்குறியாக மாற்றிப், பின் பைத்தியம்போலச்சிரித்து உள்ளே மனம் பதைபதைப்பார்கள்? எண்ணிப் பாருங்கள்! இத்தகைய அடுக்கிய கோடிகள், நம் நாட்டில் எத்தனை இடங்களில் எவ்வளவு மக்களிடம் இருக்கிறது? இந்தியா வறுமை நாடாக இருப்பதன் இரகசியம் எங்கே இருக்கிறது? இந்த நிலை மாற வழியில்லையா? கோடிக் கணக்கான ஏழை மக்களின், குமுறி எழுந்து அலைபோல ஒயும் நெஞ்சம் கேட்கிறது பெருமூச்சாக, சொற்களாகக்கூட அல்ல! பதில் கிடைக்குமா?

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துப் பார்த்து மகிழ்வதும், மேலும் மேலும் சேர்த்து மகிழ்வதும் செய்கின்ற இத்தகைய பணக்காரர்களை, வள்ளுவர் படம் பிடித்துக் காட்டுகிறார். அதையும் சிறிது பார்க்கலாம்.

பயனற்ற செல்வர்கள் ''மரம்'' போன்றவர்கள். அதுவும் காட்டிற்குள் நிற்கும் மரம்போல அல்ல, நடுவூருக்குள்ளேயே நிற்கின்ற மரம். நடுவூருக்குள் நின்றால் நல்லதாயிற்றே என்றால், இந்தச் செல்வர்கள் நச்சு மரங்களாக இருக்கின்றார்கள். நச்சுமரம்—நன்றாகப் பழுத்தமரம், நடுவூருக்குள்ளே நிற்கிறது 'செல்வன்' என்ற பெயரில்—இது வள்ளுவரின் படப்பிடிப்பு. ''நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள் நச்சு மரம் பழுத்தற்று'' என்பது குறள்.

எனவே இத்தகைய நச்சு மரங்களை அழித்துவிட்டு, நல்ல மரங்கள் தோன்றிவளர சமுதாய நிலத்தையே—மக்களின் உள்ளம் என்ற நிலத்தையே உழுது செப்பனிட வேண்டுமே. களைகளை எல்லாம் வெட்டி வீழ்த்தி, அறிவு மழையால், அன்பு மடையால், உணர்ச்சி உழைப்பால் சீர்திருத்த வேண்டுமே. அடிமையாய் ஆட்டி வைத்த ஆங்கிலேயன்தான் நடையைக் கட்டிவிட்டானே நாட்டை நம்மிடமே தந்துவிட்டு. நாம் இனிக் கடமையைச் செய்து கருத்துடன் வாழ வேண்டாமா?

வள்ளுவர் கூறும் வேறு செல்வங்கள் !

நில்லா நிலைமைத்தாய், இன்றியமையாததாய் உள்ள செல்வத்தை அறவழியில் ஈட்டி அனைவருக்கும் பயன்படச் செய்ய வேண்டும். அத்துடன் அழியாது நிலைபெற்ற, மிகவும் இன்றியமையாத செல்வங்களையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக, வேண்டிய இடங்களிலெல்லாம் செல்வத்தைப்பற்றிக் கூறிச் செல்வதோடு அல்லாமல், அழியாச் செல்வத்துட் செல்வங்களையும் வள்ளுவர் கூறிச் சென்றிருக்கிறார். அவற்றைப் பார்த்துப் படித்துப் பயன்பெற வேண்டிய கடமை நம்முடையதல்லவா. உரிமை பெற்றுவிட்டோம்-இனிக் கடமையைப் பற்றிக் கருதாதிருக்கக் கூடவா எமக்கு உரிமை இல்லாது போய்விடுப், என்போர் இருக்கட்டும். எழுச்சிக் கதிர்கள் பழுக்கக் காய்ச்சிய இரு[illegible]பைப் போல், உட[illegible]பிலே [illegible]ாது

(தொ[illegible]ச்சி 11-[illegible]க்கம்)

தோழர் மாலட்டோவ்!

நல்ல திடகாத்திரமான ஒரு மனிதன். அவன் தலையில் ஒரு மிருதுவான குல்லா யிருந்தது. முழங்கால் வரை நீண்ட கோட் ஒன்றும் தரித்திருந்தான்.

அவன் தனக்கு எதிரில் நின்று கொண்டிருந்த ஒரு சிறுவனைச் சந்தேகத்தோடு கவனித்துக்கொண்டிருந்தான். சிறுவன் சஞ்சலமுடன் நின்று கொண்டிருந்தான்.

சிறுவனுக்கு வயது 15 அல்லது 16 தானிருக்கும். ஒல்லியான உடற்கட்டை உடையவன். தலை மட்டும் சற்று பெரிது. கண்ணாடி போட்டிருந்தான். அதற்குப் பின்னாலிருந்த கண்களிரண்டும் நன்றாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அவன் காலேஜில் படிக்கும் மாணவனைப் போல ஆடையணிந்திருந்தான்.

சிறுவனை உற்றுக் கவனித்த வாசல் காப்போன் சொன்னான்—'இவ்வாலிபர் கூட இதில் சேரவந்துவிட்டாரே' என்று.

பிறகு சிறுவன் அழைத்துச் செல்லப்பட்டான். படிக்சட்டுகளையும் பல சுவர்களையும் அவர்கள் கடந்து சென்றனர். இரகசியமாய்ச் சந்திக்கவேண்டிய தனியறை வந்துவிட்டது.

அந்த அறையில்தான், நவீன ருஷ்யாவைச் சிருஷ்டிக்க, சார் மன்னருக்கு எதிராய்ச் சதிசெய்யும் மனிதர்கள் இருந்தார்கள். இவர்களைத்தான் அவ்வாலிபன் சந்திக்கவேண்டி யிருந்தது.

இந்த சந்திப்பு சுமார் 43-ஆண்டுகளுக்கு முன்னால், 1906-ம் ஆண்டு நவம்பர் மாதம் செயின்ட் பீற்றர்ஸ் பார்க்கில் நடந்தது. அப்போது புரட்சிக்கூட்டம் உலகத்தையே திடுக்கிடவைக்கும் ஒரியக்கத்தை வளர்த்துக் கொண்டிருந்தது.

''இதோ ஸ்கிரியாபின் வந்திருக்கிறார்'' என்று அந்த திடகாத்திரமான வாசல் காப்பவன், கதவைத் தள்ளிக் கொண்டே அறிவித்தான்.

அந்த அறையில் சுமார் பத்துபேர், பெட்டிகள்மீதும் மூட்டை முடிச்சுகள் மீதும் வீற்றிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் ஒரு மேஜை இருந்தது. அதன்மீது 4-மெழுகுவத்திகள் எரிந்துகொண்டிருந்தன. அவ்வெளிச்சத்தில் தாடி வளர்ந்த முகங்களுடன் கூடிய பரட்டைத் தலைகள் பல தெரிந்தன. புதிதாக வந்த வாலிபனை அத்தனை முகங்களும் நோக்கின.

''ஸ்கிரியாபினா? தெரியாதே. நீ யாரப்பா?''

''நான் ஒரு மாணவன்''

''உன்னை இங்கே அனுப்பியது யார்?''

''யாருமில்லை. நான் புரட்சிக் கொள்கையுடையவன்''

இரகசியப் போலீசார் தங்களைப் பிடிப்பதற்காக சகல தந்திரங்களையும் செய்து வருகிறார்கள் என்ற விஷயம் இச்சதிகாரர்கள் அனைவருக்குந் தெரியும். ஆதலின் வாலிபனை அவர்கள் பலவிதச் சோதனைகளுக்கு உள்ளாக்கினார்கள்.

''துரோகிக்கு எந்தக்கதி ஏற்படுமென்று உனக்குத் தெரியுமல்லவா?'' என்று அந்தக் கூட்டத்துக்குத் தலைமையாயிருந்தவன் கேட்டான். அவனுடைய ஆள்காட்டி விரல் மேஜை மீது கிடந்த கைத்துப்பாக்கிகளைக் காட்டிற்று.

நான் ''உங்களைக் காட்டிக்கொடுத்தால் என்னைக் கொன்றுவிடுங்கள்!''

''சரி. பிரமாணம் எடுத்துக்கொள்''

அதுமுதல், வியாசெஸ் லாவ்மிக் கேயிலோவிட்சு ஸ்கிரியாபின் என்ற அவ்வாலிபன் அக்கூட்டத்திலே சேர்ந்துவிட்டான். அதே வாலிபன்தான் இப்போது முப்பது ஆண்டுகளுக்குப்பின்பு, 'அங்கி' என அர்த்தப்படும் 'மலாடோவ்' என்ற புனைப்பெயருடன் ருஷ்யநாட்டின் 2-வது தலைவராய்த் திகழ்கின்றார்!

மலாடோவ் 1890-ம் ஆண்டில், வியாட்கா மாகாணத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை மிக்கேயில் ஸ்கிரியாபின் ஒரு குமாஸ்தாவாயிருந்தார். நல்ல கனவான். அவருக்கிருந்த மனக்கவலையெல்லாம் தன்னுடைய பிள்ளைகளில் வியாசெஸ்லால் தன்னைக்காட்டிலும் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்பதுதான்.

பள்ளியில் நன்றாகக் கல்விகற்றார். நல்ல சாதுரியமும், ஞாபகசக்தியும் அவருக்குண்டு. காலேஜில் அவர் கடைசி வருஷம் படித்துக்கொண்டிருந்தபோது அவருடைய கைக்குள் மடித்து வைத்திருந்த ஒரு கடிதத்தை யாரோ திணித்தான்—அக்கடிதம் அப்போது எங்கும் பரவிக்கொண்டிருந்த புரட்சித் துண்டுப்பிரசுரம்!

அது முதல் இரகசியக் கூட்டங்களுக்கு, விஜயம் செய்யலானார். சர்க்காரால் விலக்கப்பட்டிருந்த புத்தகங்களை வாங்கிப்படித்தார். புரட்சியைக் கிளப்புபவர்களுடைய விபரங்களைத் தெரிந்துகொண்டு, சிநேகம் கொள்ளவாரம்பித்தார்.

அந்த 1906-ம் ஆண்டு செப்டம்பர் மாத மாலையில், யாரோ ஒருவர் புரட்சிக்காரர்கள் கூடுகிற ஒரு பழைய கட்டிடத்தின் விலாசத்தைக் கொடுத்தார். அதை அவர் ஒருபெரிய பாக்கியமென்று கருதி மகிழ்ந்தார்.

ஆனால் பிரமாணம் எடுத்துக்கொண்டது ஸ்கிரியாபின் அல்ல. மாலடோவ் தன்னுடைய தந்தை தன்னைப்பற்றி எண்ணியிருந்த கோட்டைகளையெல்லாம் அதேக்ஷணத்தில் இடித்துத் தள்ளினார். தன் பெயரையும் மாற்றிக்கொண்டார். அன்றுமுதல் தீவிரமான ஒரு புரட்சிக்காரராய் மாறிவிட்டார். துண்டுப்பிரசுரங்களைத் தாராளமாய் வழங்கினார். தன் தோழர்களிடமும் புரட்சிப் பிரசாரப் பேச்சுகளை நடத்திவந்தார்.

1909-ம் வருஷம் புரட்சிக்காரர்கள் ஆதரவில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தை விட்டு வரும்போது, அவர் இரகசியப்போலீசாரால் கைதுசெய்யப்பட்டு 2-வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். சிறைத்தண்டனையனுபவித்து வெளியில் வரும்போது அவருக்கு வயது 19-தான்!

எனினும் சிறைவாசத்தால் மாலடோவுக்கு ஊக்கம் குறையவில்லை. சில நாட்களுக்குப்பின், இப்போது லெனின்கிராட் என வழங்கப்படும் செயிண்ட் பீற்றர்ஸ்பர்க்குக்குத்திரும்பினார். அங்கு மும்முரமான போல்ஷ்விஸ்டாகத் தீவிரமான பலகாரியங்களைச் செய்து வந்தார். அத்துடன் சர்வகலாசாலையிலும் பயின்று வந்தார். தவிர இராக்காலங்களில் தடைவிதிக்கப்பட்டிருந்த பிரவதா, சுவெஸ்டா ஆகிய பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு வந்த கூட்டத்தில் வேலை செய்து வந்தார். அவரே கட்டுரைகள் எழுதுவார், கம்போஸ் செய்வார், கை இயந்திரத்தில் சுற்றி அச்சடிப்பார்!

அவருடைய வாழ்க்கை எப்படி நடந்து வந்தது? மிக ஒல்லியானதேகத்தையுடையவர் அவர், ஆனால் அவருடைய நீல நிறக்கண்கள் கண்ணாடிக்குள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

போலீசார் அடிக்கடி தொந்தரவு கொடுப்பார்கள். மலாடோவ் ஒவ்வொரு சமயமும் தப்பித்துக் கொள்வார். பிறகு 1911-ல் ஆரம்பித்த இரகசியமான சூழ்ச்சிக்காரியங்களையெல்லாம் விட்டு, ஈரம் நிறைந்த அறைகளிலே மெழுகுவத்தி வெளிச்சத்திலே ஏதேனும் வேலை செய்து கொண்டிருப்பார்.

1912-ஜூன் மாதத்தில் மலாடோவ் மீண்டும் கைதானார். ஆனால் சிறையில் காவல் காத்துக் கொண்டிருந்தவனைத் தாக்கி வெளியிலே வந்து விட்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

குடி அரசு

29—1—49 சனிக்கிழமை.

கண் திறக்குமா?

[✶]

உலகில் யார் யார் அடாத வழியில் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம், மற்றவர்கள், அந்த வழியை, அக்கிரமமான அடாதவழி என்று உணர்ந்து கொண்டு, அந்த வழி கூடாது! என்று உரத்த குரலிலே ஓங்கிக் கூறுவது கேட்டுப் பெருங் கஷ்டமாக—சகிக்க முடியாததாக இருக்கலாம். ஆனால் விழிப்புணர்ச்சி வினையாற்றத் தொடங்கி விட்டால், விபரீத நடத்தையாளர்கள் அவற்றை விட்டுவிட வேண்டும்; இன்றேல் விரைவாகவே ஒழிந்துபட வேண்டும் என்பது, வெகு வெகு நீண்ட காலமாகவே சரிதம் கூறிவரும் உண்மை.

உழைக்காமலிருந்துகொண்டே, உல்லாஸ வாழ்வு வாழ வேண்டும் என்றெண்ணுகிறவர்கள் அல்லது அந்த முறையில் பழகியவர்கள் அல்லது அப்படிப் பழக்கப்படுத்தப்பட்டவர்கள் ஆகிய இந்த ஒரு வகையார்தான் சமுதாய ஒழுங்குக்கு—சமாதானத்திற்கு வைரிகள், அவற்றை விரட்டியடிக்கும் விஷக் கிருமிகள் என்பதை உலக முழுவதுமே உணரத் தலைப்பட்டு விட்டது; அதுமட்டுமல்ல ஒழிக்கவும் தலைப்பட்டுவிட்டது.

இந்த உல்லாசபுரியினருக்கு அன்று தொட்டு இன்றுவரை, அவர்களின் உல்லாசபுரி ஒழிந்துவிடாவண்ணம் பாதுகாத்துவரும் அரண்கள் பலவுண்டு. என்றாலும் முக்கியமாக--அழிப்பதற்கு அரும்பாடுபட வேண்டியதாக இருந்துவருவது மதம், அதையொட்டிய பழக்க வழக்கம்.

இந்தப் பழக்க வழக்கங்களில் ஒரு சிறு மாற்றம் என்றால்கூட இவர்களால் சகிக்க முடியாது. சீறிப்பாயத்தான் செய்வர். பின், மதத்தில் ஏதேனும் மாறுதல் என்றால், மதம் மடிய வேண்டும் என்றால் இவர்களின் கொடூரச் செயல்களுக்கு ஒரு எல்லைகட்ட முடியுமா?

இவ்வளவு கொடுமைகளுக்கும் பலி கொடுத்துக், கொடுமையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டோம்—குழி தோண்டிக் கொண்டிருக்கிறோம்—குழி பறிக்கவில்லையென்றாலும் நடைப் பிணமாக்கி விட்டோம் என்று கூறுகிறது மேலை நாடு.

ஆனால், கீழ் நாட்டின் நிலை என்ன? குறிப்பாக நம் நாட்டின் நிலை என்ன? மடமையில் பிறந்து வளரும் மதம், காலத்திற்குக் காலம் மெருகிடப்பட்டு வருகிறது என்று சொல்லக்கூடிய நிலையில், மிருகவுணர்ச்சியில் பிறந்து வெறியைத் துணையாகக் கொண்டிருக்கும் மதத்தினால் விளைந்து வந்திருக்கும் கேடுகளைப் பற்றி, நம்மைப்போல் எந்தவகைக் கேடுகளையும் சமாளித்துச் சிலர் கூறி வரும்போது நமக்குக் கிடைக்கும் பரிசென்ன? மதத் துவேஷி! வகுப்புத் துவேஷி! பார்ப்பனத் துவேஷி! என்கிற இவைகள்தான்.

மதத்துவேஷி என்று மதத்தினால் லாபம் அடைகிறவன் சொல்லுவதையோ, வகுப்புத்துவேஷி என்று வகுப்பினால் தனி நன்மை அடைகிறவன் சொல்லுவதையோ, பார்ப்பனத்துவேஷி என்று பார்ப்பனீயமே மூலதனமாகக் கருதிவாழும் பார்ப்பனர்கள் சொல்வதையோ நாம் குறைகூறவில்லை. அவர்கள் அப்படித்தான் சொல்லியாக வேண்டும். மேலும், அதை எவரும் எதிர்பார்க்கத்தான் வேண்டும். ஆனால் நடப்பு எப்படி?

மதத்தால் வாழ்வை இழந்து, வகுப்பால், வளப்பத்தைப் பறிகொடுத்து, பார்ப்பனீயத்தால் பஞ்சைகளாகி விட்ட கூட்டத்திலிருந்தும் நமக்கு மேற்கண்ட பரிசுகள் தரப்படுகின்றன. இதற்குக் காரணமென்ன?

வெறும் "அடிமை மோகம்" என்பதோ, "கழுத்தில் நுகத்தடி ஏறினால் நடந்த தடம் தவிர வேறு தடம் இல்லையென்று நம்பும் செக்குமாடுகள்" என்கிற பேச்சோ முற்றிலும் பொருந்தாது. அடிமைகள் அடிமைகளே அல்ல, அவர்களுக்கும், ஆளும் உரிமையுமுண்டு என்று முழக்கப்படுகிற காலமிது. இந்தக்காலத்தில் "அடிமை மோகம்" "செக்கு மாடுகள்" என்றே சொல்லிவிட முடியுமா?

அடிமை மோகம் உடையவர்களாகப் பெருங்கூட்டத்தினரை அழுத்தி வைப்பதினால்தான், செக்கு மாடுகளாகப் பிறரைச் சுற்றச் செய்வதினால்தான், தங்களின் நியாயமான விகிதாச்சாரத்தைக் காட்டிலும் அதிகப் பங்கு அடைய முடியும் என்று நம்புகிற மற்றொரு சிறுகூட்டம் அடிமை உலகிலிருந்து முளைத்து விடுகிறது என்கிற உண்மையை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதாயிருக்கிறது.

ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படும் பெருங்கூட்டத்தினரை-அக்கிரமத்திற்கு ஆளானோரைக் குப்பை கூளங்களாகப் பெருக்கித் தள்ளுவதற்குக் கூட்டுமாறாகப் பயன்படுகிறது இச்சிறுகூட்டம். விளக்கமாற்றுக்குப் [கழிந்த] பட்டுக்குஞ்சம் கட்டினதுபோல, இந்தச் சிறுகூட்டமும் சமுதாயஉழைப்பை உறிஞ்சும் சழக்கர்களால், தனக்கடங்கிய அதிகாரம் என்கிற பட்டுக்குஞ்சம்கட்டப்பட்டுவிடுகிறது. இதனால் ஒடுக்கப்பட்ட கூட்டம் உரிமை யுணர்வு பீறிட்டெழச் செயலாற்றும்போது, ஒடுக்கப்பட்ட கூட்டத்திலிருந்தே எதிர்ப்பும், ஒழிப்புவேலையும் தொடங்கப்படுகிறது. இதை நாம் எப்படித்தான் எடுத்துக் கூறினாலும், உணராதவர்கள் போல நடித்து வருகிறார்கள் நம் திராவிட தேசியத் தோழர்கள். நடிப்பைக் கைவிட்டு, நடப்பில் கவனத்தைச் செலுத்தட்டும் என்பதே நம் ஆசை! அந்த ஆசையின் மீது இன்று ஒரு நடப்பை எடுத்துக் காட்டுகிறோம்.

இந்து மத—மட நிர்வாகம் பற்றிய மசோதா, இன்று ஆளவந்த

வாதளான காங்கரஸ் மந்திரிகளால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உண்மையைக்கூறவேண்டுமானால், பார்ப்பனர்களின் பேரெதிர்ப்புக்கிடையே முன்பு பொப்பிலி அரசர் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கும் மத ஸ்தாபனப் பாதுகாப்புச் சட்டத்தில், ஒரு திருத்தம் என்றுதான் இதைக் கூறவேண்டும். இதனைக் கொண்டுவந்திருப்பவர்கள், பொதுவாகக் காங்கரஸ் மந்திரிகள் என்று சொல்வதைக் காட்டிலும், முதன் மந்திரி ஓமந்தூரார் என்று கூறுவதே பொருத்தமாகும்.

விரதானுஷ்டானங்களைப் பின்பற்றி மேனியை வாட்டி வதக்கி வருபவர் நம் ஓமந்தூரார். குருவிலும் உத்தமோத்தமமான குரு, பார்ப்பனக் குருவே என்பதைக் கண்டுபிடித்து அவர் பாத பூஜை பண்ணும் பக்த சிரோன்மணியாய் விளங்குபவர் நம் ஓமந்தூரார். "ஆண்டவர்கள்" திருவுருவுகளை அவர் அடியவர்கள் வேஷம் போட்டு நடிப்பதைக் கண்டு, அடுக்காது! அடுக்காது!! என்று கூவி அலறித் துடிதுடிக்கும் அரும்பெரும் குணத்தினரவர். இவருடைய மதபக்திக்கு முன்பு, வேறு எவருடைய பக்தியாயிருந்தாலும், அது கால்மாத்து அரைமாத்துக் குறைச்சலாகத்தான் இருக்க வேண்டும் என்பது, பக்தி வியாபாரிகளால் தேய்த்துப்பார்த்துச்சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பு! இப்பேர்ப்பட்ட ஆஸ்தீக சிரோன்மணியால் கொண்டுவரப்பட்டிருக்கும் இதனைக் கண்டுதான், இன்று பார்ப்பனர்கள், மதத்திற்கு ஆபத்து, இது அக்கிரமக் குறுக்கீடு எனறெல்லாம் கதறுகிறார்கள்.

நாட்டிலுள்ள கோவில்கள், மடங்கள், மற்றும் மத வளர்ச்சிக்கான பிரச்சாரக் கழகங்கள் போன்றவைகள் மதஸ்தாபனங்கள். இந்த மதஸ்தாபனங்களில், லட்சக்கணக்கில் கோவில்களிருந்தாலும், நூற்றுக்கணக்கான கோவில்களையும், விரல்விட்டு எண்ணக்கூடிய சில மடங்களையும் பற்றியதுதான் இந்த மசோதா. இன்னும் சொல்லப்போனால் இந்த நூற்றுக்கணக்கான கோவில்களுக்கு வந்துகொண்டிருக்கும் வருமானத்தையும், சில மடங்களுக்கு வந்துகொண்டிருக்கும் வருமானத்தையும், எப்படி நிர்வகிக்கவேண்டும்? அந்தப் பொருள் எப்படிச் செலவழிக்கப்பட வேண்டும்? என்கிற விஷயத்தில் அரசாங்கத்திற்கு முழு உரிமையுண்டு என்பதை நிலை நாட்டுவதுதான் இந்த மசோதா. மேலும், இந்த மதஸ்தாபனங்கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாகச், சிலரின் ஏகபோக மிராசுஆகிக் கேள்வி கேட்பாடு இல்லாத நிலையில், மரகதக் கிண்ணத்தில் மது அருந்துவதற்கும், விதவிதமான மாதர் ரகங்களோடு குலாவுவதற்கும், வயிற்றுப் பெருச்சாளிகளின் தொந்தி வாடாமலிருப்பதற்காகவுமே பயன்பட்டு வந்திருக்கிறது என்கிற மக்களின் அழுகையும் ஆத்திரமுமே இந்த மசோதா!

இதைக்கண்டா இந்தக் கதறல்? இதுவா மதத்திற்கு ஆபத்து? அக்கிரமக் குறுக்கீடு? எண்ணிப் பார்க்கட்டும் நம் திராவிடத் தேசியத் தோழர்கள்!

மடங்களுக்கும் சில கோவில்களுக்கும், வரையறையில்லாத செல்வம் வளர வழி ஏற்பட்டிருக்கின்றதென்றால், அதற்குக் காரணமென்ன? உழைப்பின் உருமாற்றமான செல்வம், உழைப்பே இல்லாத இந்த ஸ்தாபனங்களுக்கு எப்படி வந்து குவிகின்றன? ஆதிக்கக்காரர்களின் ஆஷாட பூதி வேஷங்களும், தந்திரமிக்க சாகஸப் பேச்சுகளும் கருவிகளாக நிற்க, உழைக்கும் மக்களின் பேதைமை—உளுத்துப்போன மனத்தின் அச்சம் ஆகிய இவைகளல்லவா இந்த ஸ்தாபனங்களுக்குச் செல்வத்தைச் சேர்ப்பிக்கும் வாய்க்கால்கள்.

மக்களால் சேரும் பணத்தைப், பின் மக்களுக்காகச் செலவிடப்படவேண்டிய நேரத்தில், மக்கள் ஆட்சி அதில் தலையிடுவதா அக்கிரமக் குறுக்கீடு?

மதச் சார்பற்ற ஆட்சி என்று கூறுவது உண்மையென்றால், மக்களை ஆளும் சர்க்கார், மக்களுக்காக என்று சொல்லப்படும் மத நிர்வாகத்தில், பூரணமாகத் தலையிடவேண்டியதே நியாயம். மத நிர்வாகம் என்கிற பெயரால், தேவையில்லாத வழிகளால் செலவழிக்கப்படும் செல்வத்திற்கு தேவையையும், பயனையும் கண்டே செலவுசெய்யவேண்டும் என்று வரையறை செய்வதே நியாயம். அரசமரத்தடிப் பிள்ளையாரும் தெய்வம்தான், ஆயிரக்கால் மண்டபங்களோடு பெரிய கோட்டை கொத்தளங்களை எழுப்பி அவற்றில் குடி வாழ்வதும் தெய்வம்தான் என்கிற உறுதி, வழிபாடு செய்பவர்களுக்குள் இருந்தால்; இந்த இரண்டு தெய்வங்களுக்குள் ஏன் இந்த வித்தியாசம்? என்றுதான் கேட்கப்படும் மதமற்ற சர்க்காரால். அரசமரத்தடிப் பிள்ளையார் அரைக்காசு, ஒரு காசு செலவு செய்வதோடு, அது தெய்வத்தன்மையைக் காப்பாற்றிக்கொண்டு விடுகிறதென்றால், ஆயிரக்கால் மண்டபத்தானுக்குமட்டும் அதன் தெய்வத்தன்மையைக் காப்பாற்ற ஆயிரம் ஆயிரமாக ஏன் செலவு செய்யப்படவேண்டும்? என்று கேட்பதுதான் மதச்சார்பற்ற மக்களாட்சியின் கடன். இன்னும் ஒருபடி மேல்சென்று கூறவேண்டுமென்றால், ஒவ்வொரு ஊரிலும் எத்தனை மக்கள் கோவிலுக்குப் போகிறார்கள்? அந்தக் கோவில் எந்த அளவு விஸ்தீரணமாயிருக்கவேண்டும்? கோவிலில் குடியேறியிருக்கும் தெய்வங்களுக்கு எது எது அத்தியாவசியமான செலவுகள்? இந்த ஏற்பாட்டில் அதற்கு வருகின்ற வருமானமெவ்வளவு? என்பவைகளையெல்லாம் கணக்கிட்டு, அந்தக் கணக்குப்படி செய்வதுதான் மதச்சார்பற்ற மக்களாட்சி என்று சொல்வதற்கு அழகு!

மசோதாவைக்கொண்டு வந்திருப்போர், தங்களை மதச்சார்பற்றவர்கள் என்று சொல்லிக்கொண்டாலும், சொல்லிக்கொள்வதற்கேற்றபடி மசோதா இல்லை. தானினைத்த மூப்பாக ஒவ்வொரு காரியத்தையும் செய்யாமல், தங்களையும் கலந்து கொண்டு செய்யவேண்டுமென்று ஆதிக்கவாதிகளை வேண்டுவதுதான் இந்த மசோதா. அப்படியிருந்தும், நாம் இந்த மசோதாவை வரவேற்கிறோம், இதைச் சட்டமாக்க வேண்டுமென்ற காங்கரஸ் தோழர்களைப் பாராட்டுகிறோம். ஏன்? தேசியத்தோழர்கள் சிந்திக்கட்டும்!

காந்தியார் பெயரைக்கூறிக் காசு பறிக்கப் புதுவழி கண்டுபிடித்திருக்கும் தேசியப் பார்ப்பனர்கள், எதற்கெடுத்தாலும் "காந்தியார் அப்படிக் கூறினார், இப்படிக்கூறினார்" என்று கூறுவதுதான் வழக்கம். அப்படிக் கூறிவரும் பார்ப்

பனர்கள், இந்த விஷயத்தில் மட்டும் காந்தியாரைக் கீழே போட்டு விடுவதற்குக் காரணமென்ன? தென்னாட்டுக் கோவில்களை விபசார விடுதி என்றார் காந்தியார். அவர் மடங்களைப் பார்க்கவுமில்லை, தென்னாட்டு மடங்களைப் பற்றித் தனியாக அபிப்பிராயம் கூறவுமில்லை. கோவில்கள் விபசார விடுதிகள் என்றால், மடங்கள், விபசாரப் பண்ணைகள் என்பதும், வன்னெஞ்சர்களின் கொலைக்களம் என்பதும்தான், அவர் அபிப்பிராயம் கூறியிருந்தால் கூறியிருக்க முடியும் என்பது நமது கருத்து. அன்று அவர் கூறியபோது இருந்த கோவில்களின் நிலைமைக்கும், இன்றைய நிலைக்கும் என்ன வித்தியாசம்? என்பதைக் கேட்கவேண்டும் நம் திராவிடத் தேசியர்கள்!

ஒரு துண்டுக் கறிக்காக, ஓங்கி ஓங்கிக் குரைக்கும் பிராணியைப் போல, அவ்வளவு நன்றி விசுவாசத்துடன் இல்லாவிட்டாலும், இந்தப் பிரச்னையில், வாங்குகிற கூலிக்காகவேனும் வரட்டுக்கூச்சல் போடவேண்டியது தான் வக்கீல்களின் வேலை என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் காந்திய வழி என்று கூறும் தேசியப் பார்ப்பனர்கள் இதைக் கண்டு ஏன் சீறி விழவேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும் திராவிடத் தேசியர்கள்!

மத வளர்ச்சிக்குப் பாதகமாகவோ, மதக் கொள்கைகளுக்கு முரணாகவோ இல்லாமல், மத நிலையங்களுக்கு வரும் வருமானத்தை-செலவை நிர்வகிக்கச் சர்க்கார் முன்வரும் இந்தச் செயல், மதத்தையொட்டி நடந்துவந்த மத ஆதிக்கக்காரர்களின் பழக்கவழக்கங்களை ஓரளவு மாற்றுவதென்பது தான் கருத்தாக இருக்கும்போது, மதத்துக்கு ஆபத்து! என்று பார்ப்பனர்கள் கூச்சல் போடுவதில் ஏதேனும் அர்த்தமிருக்கிறதா? என்பதை எண்ணிப்பார்க்கட்டும் நம்தேசியத் திராவிடர்கள்!

இப்படியாக, மதப் பெயரால் அவர்கள் வாழ்ந்து வந்த வாழ்வுக்கு, ஏதோ ஒரு சிறு வகையில் மாறுதல் என்றால்கூட, வைதீகப் பார்ப்பனரிலிருந்து வக்கீல் பார்ப்பனர்கள் வரை, கல்லைச் சுரண்டும் பார்ப்பனரிலிருந்து காபிகிளப் பார்ப்பனர்கள் வரை, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு ஓலமிட வந்து விடுகிற உண்மையை, உணர மறுக்கலாமா என்றுதான் நாம் காங்கரஸ் திராவிடத் தோழர்களைக் கேட்கிறோம்.

அக்கிரமமான நடத்தையால் வாழ்ந்து வரும் மத ஆதிக்கக்காரர்கள், தங்கள் ஆதிக்கத்திற்குச் சற்று அசைவு ஏற்பட்டால்கூட, மதத்துவேஷம்! மதத்திற்கு ஆபத்து! என்றெல்லாம் கூச்சல் போட்டு விடுகிறார்கள் என்பதை உணர்ந்தால், பின்னும், இந்தப் பார்ப்பனர்கள் பேச்சைக்கேட்டுக் கொண்டு நம்மைப் பார்ப்பனத்துவேஷி என்றோ வகுப்புத் துவேஷி என்றோ மதத்துவேஷி என்றோ கூறுவதில் ஏதேனும் நாணயமோ—யோக்கியதையோ இருக்கிறதா என்றுதான் நாம் தேசியத் திராவிடர்களைக் கேட்கிறோம்.

இந்தத் திருத்த மசோதாவினால், மத ஸ்தாபனச் சொத்துக்களினால் மக்கள் அடையவேண்டிய நன்மை எவையோ, அவ்வெல்லாமுமே விளைந்து விடாது என்பது உறுதி. ஏதோ மிக மிகச் சிறிய ஒரு பகுதியாவது, மக்கள் நன்மைக்கான வழியிலும் செலவு செய்யப்படலாம் என்று எதிர்பார்ப்பதினால் தான் நாம் இதை வரவேற்கிறோம். உண்மையாய், நாளைக்கு நடக்கப் போவதுமிதுதான். இந்த அளவுக்குக்கூட இந்நாட்டு மதஆதிபத்தியக்காரர்கள் விட்டுக்கொடுக்க முன்வரவில்லை என்றால், இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு, இவர்களின் புத்திமதிப்படி நடக்கலாமா நம் தேசியத் தோழர்கள் என்பதுதான் நம் கேள்வி!

இன்றைய மந்திரி சபையினர், சூத்திரர்களே நிறைந்தது. இவர்களுக்கு இவ்வளவு திமிரா? என்பதுதான் பார்ப்பனர்களின் குமுறல். இந்தக் குமுறலைச் சுதேசமித்திரன் எப்படிப் பிரதிபலிக்கிறது என்பதையும் இங்கு எடுத்துக் காட்டுகிறோம்.

மத ஸ்தாபனங்களில் ஊழல் இல்லை என்று சொல்ல முடியாதாம். ஊழல் இருக்கத்தான் செய்கிறதாம். அவற்றை ஒழிக்க வேண்டியதுதானாம். ஆனால் யார் ஒழிப்பது? என்று கேட்கும் மித்திரன் "இந்து மத வளர்ச்சியில் அந்தரங்கமான அக்கரையும், அதற்கான அறிவாற்றலும் கொண்ட இந்துமதப் பிரமுகர்கள் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ள வேண்டிய வேலை இது" என்று கூறுகிறது.

இதற்கு என்ன அர்த்தம் என்று நாம் தேசியத் தோழர்களைக் கேட்கிறோம். மத வளர்ச்சியில் அந்தரங்கமான அக்கரை என்பதற்கு என்ன அர்த்தம்? அதற்கான அறிவு எது? ஆற்றல் எது? அதைச் செய்யவல்ல இந்துப் பிரமுகர்கள் என்பவர்கள் யார்? இக்காரியத்தை ஏன் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டும்?

மத வளர்ச்சியில் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாருக்கும் அக்கரை இருக்க முடியாது, அக்கரை காணப்பட்டாலும் அது அந்தரங்கமானதாய் இருக்க முடியாது என்பதுதானே இதன் கருத்து! மத வளர்ச்சிக்கான அறிவு, வேத அறிவுதான் என்பதும் வேதியர்களின் ஆற்றல் ஒன்றுதான், இதை வினைப்படுத்த முடியும் என்பதும் தானே இதன் கருத்து! இல்லாவிட்டால் இந்துப் பிரமுகர்கள் என்பதற்கும், இதனைத் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டும் என்பதற்கும் வேறு என்ன கருத்துச் சொல்லிவிட முடியும்?

இந்த மசோதாவை நிறைவேற்றுவதாயிருந்தால், மறுதேர்தல்வரை காத்திருக்க வேண்டும் என்று கூறுகிறது மித்திரன். ஏனெனில் ஆட்சியைக் கைப்பற்று முன்பு, இப்போது அதிகாரத்தில் உள்ளவர்கள், இப்படியெல்லாம் செய்வதற்கு வாக்காளர்களிடமிருந்து அனுமதி பெறவில்லையாம். அடடா என்ன ஜனநாயகம்!

இந்த ஜனநாயகத்தை ஏன், மற்ற செயல்களில் காட்ட முன்வரவில்லை மித்திரன் கும்பல்? முக்கியமாக, எது எக்கேடுகெட்டாலும் நான் போய்த்தான் தீருவேன் என்று வெள்ளையன் கூறுவான் என்பதை எதிர்பாராத காங்கரஸ் தோழர்கள், அவன் வெளியேறியபின்பு, இந்த நாட்டின் தலையெழுத்தை எழுதுவது மாற்றப்பட்ட சட்டசபையிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட அதன் அங்கத்தினர்கள் என்று கூறி, அதற்கு அரசியல் நிர்ணயசபை என்று பெயர் கூறியபோது, இந்த ஜனநாயக வுணர்ச்சி எங்கே பறந்துபோய்விட்டது?

ஏதேச்சாதிகாரமாய்ச் செய்யப்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தான் எழுவோம் என்போர் கிடக்கட்டும். நாம் கவனிப்போம்.

கல்விச் செல்வம்!

முதலில் தனி மனிதனுக்கு மட்டுமின்றி, ஒரு மக்கட் கூட்டத்திற்கு, இனத்திற்கு, நாட்டிற்கு இன்றியமையாத செல்வம்—அழியாச் செல்வம் எது? அழியக்கூடிய செல்வத்தையும் ஆக்கி அழிக்கும், அறவழியில் பயன்படுத்தும் அடிப்படையான செல்வம் எது? என்றும் நிலை பெற்றதாய், ஏழைக்கும் இன்பம் பயப்பதாய், அறிவைப் பெருகச் செய்து, அன்பை உணரச்செய்து, ஆக்கத்தை உணரச்செய்வதாய் உள்ளகேடில் செல்வம் எது? மொழியை வளர்க்கவும், இழிவைப் போக்கவும், மானங்காக்கவும், ஊனம் ஒழிக்கவும் உதவும் செல்வம்—விழுச்செல்வம் எது?

கேடில் விழுச்செல்வம்
கல்வி, ஒருவற்கு
மாடல்ல மற்றையவை.

ஆம். கல்விச்செல்வந்தான் அது. பிறசெல்வம்—பொருள் அனைத்தும் இதனுடன் வைத்துப்பார்க்கும் போது, செல்வமாக மதிக்கத் தக்கனகூட அல்ல. இனி,

கேள்விச் செல்வம்!

நாம் படிக்கின்றோம், பழகுகின்றோம், காண்கின்றோம், கருதுகின்றோம், கேட்கின்றோம்! ஆனால் நம் கண்ணைப்போலக் காதும் கூர்மையாக இருக்கின்றதா? நன்றாகக் கேட்கின்றதா? அநேகமாகப் பலருக்கு இதில் சந்தேகமிராது. ஆனால் எல்லோரும் கண்ணைப்போலக் காதையும் பயன்படுத்துகிறோமா? கடுக்கன், தோடு போடுவது தவிர, கண்ணாடி மாட்டுவது தவிர? காதில் துளையுண்டு, எனினும் அது "கேள்வி"யால் துளைக்கப் படவேண்டும். அப்பொழுதுதான் அது கேட்கும் காதாகும். இன்றேல் பாரதி பாடுவதுபோல், 'செவிடர்களாய்க் குருடர்களாய்"—காதிருந்தும், கண்ணிருந்தும்—வாழவேண்டியதுதான்! கேள்வியால் துளைக்கப்படாத செவி என்ன செவி? என்று கேட்கும் வள்ளுவர் மேலும் இதுபற்றி "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை" என்கிறார். இச்செல்வமும்நாம் அடைய வேண்டியவற்றுள் ஒன்றல்லவா? நிற்க,

அருட் செல்வம்!

பொருட் செல்வத்தை இழந்தோர்கூட மீண்டும் அதை அடையலாம், எளிதில். ஆனால் அவர்களால் அடைய முடியாத, அழிவில்லாத செல்வம் ஒன்று இருக்கிறது, அதுதான் அருட்செல்வம் என்பது! 'பொருளற்றார் பூப்பர் ஒருகால்'—கையிலே பொருள் இல்லாத கபோதிகள் கூடச் சில சமயங்களில் பெருஞ் செல்வராக மாறிவிடுவதைக் காண்கின்றோம். ஆனால் அருளில்லார் மறுபடியும் அருளுடையார் ஆவது அரிது. அருள்—மனிதனின் இயற்கைப் பண்பு. அது இல்லாத மனிதன் விலங்கினும் கேடாகிறான். எனவேதான் 'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள' என்று தமிழ் மறை கூறுகிறது.

மன எழுச்சி மங்காத செல்வம்!

'ஊக்கமுடைமை' என்பது இருக்கிறதே, அதுவும் ஒரு அழியாச்செல்வம். பேடியிடம் எது இருந்துதான் என்செய்ய? ஊக்கம் நிறைந்த, உறுதிவாய்ந்த 'உள்ளம் உடைமை'தான் "உடைமை" என்கிறார் வள்ளுவர். மற்ற அழிகின்ற செல்வமாகிய 'பொருள் உடைமையை', 'நில்லாது நீங்கிவிடும்' என்கிறார். எவ்வளவு

பட்ட இந்த அரசியல் நிர்ணய சபையினர், ஏதேச்சாதிகாரிகளுக்கு ஏவலாளர்களாயிருந்து நிறைவேற்றியிருக்கும் பிரகடனத்தை எடுத்துக்காட்டி, அதற்கு விரோதம் இந்த மசோதா என்கிறது மித்திரன். "கொள் என்றால் வாயைத் திறப்பதும், கடிவாளம் என்றால் வாயை மூடுவதும் தானே" இந்தப்போக்கு.

பார்ப்பனர்களின் கூச்சல், இன்னும் எங்கெந்த இடங்களில் ஒலிக்கும்? இனாம் ஒழிப்பை நிறுத்தி, வெற்றிக்கொடி நாட்டி, காங்கரஸ் கட்சியினர் பெரும் மெஜாரிட்டியினராய் நிறைவேற்றியிருந்தும் அதை ஒழித்துக்கட்டிய தர்ப்பா சூரர்கள், இதில் எப்படியெல்லாம் நடந்துகொள்ளுவார்கள் என்று, யார்தான் எதிர்பார்த்து வரையறை கட்டமுடியும்?

அக்கிரகாரத்தின் கட்டுப்பாடான இந்தப் போக்கு, நம் தேசியத் திராவிடத் தோழர்களின் கண்களைத் திறந்து விடுமானால் அது போதும்! அதற்காகவே நாம் இவ்வளவு தூரம் இதை விளக்கிக் கூறினோம்! ஆனால் கண் திறக்குமா?

ஈரோட்டில் சந்திர மோஹன்

"அர்ச்சுனன்" கல்வி நிலைய அமைப்பு நிதிக்காக ரூ. 7501.

ஈரோடு ஜன 24.

நம் மறைந்த தளபதி அர்ச்சுனன் அவர்களின் பெயரால், காங்கேயத்தில் கட்ட இருக்கும் பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்கும் உணவு விடுதிக்குமாக உதவி நிதி சேர்த்துத் தரும் முறையில், தளபதி அண்ணா அவர்கள் தம் குழுவினரோடு சந்திர மோஹன் என்னும் நாடகத்தை, நேற்றிரவு 10-மணிக்குத் தந்தை பெரியாரவர்கள் தலைமையில், ஈரோடு ஸ்டார் டாக்கீசில் நடத்தினார்கள்.

நாடகத்தில் கலந்து நடித்த நம் இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவரும், மிகச் சிறந்த முறையில் நடித்தார்கள் என்றாலும், அனைவரின் உள்ளங்களையும் ஈர்க்கும் வண்ணம், தோழர் சம்பத் அவர்களின் நடிப்பு இருந்தது என்பதைப் பெரிதும் குறிப்பிடவேண்டியதாகும்.

நாடகமுடிவதற்கு 3-காட்சிகளுக்கு முன்னால், தலைவர் பெரியாரவர்கள் கையில் [நன்கொடையாலும், வசூலாலும் சேர்ந்த] ரூ. 7001-கொண்ட பண முடிப்பைக் கொடுக்க, பெரியாரவர்கள் மேலும் 500-ரூபாயைச் சேர்த்து, 7501-ரூபாயாக, அர்ச்சுனன் அவர்களின் மாமனாரும், பிரபலக் காங்கரஸ்காரரும், நிதிக்குழுவின் தலைவருமான தோழர் வி. சி. சுப்பையா கவுண்டர் அவர்களிடம் கொடுத்தார்கள். நாடகத்தின் சிறப்பையும், நடந்த வரலாற்றைச் சித்திரித்துக் காட்டுவதுதான் இந்நாடகம் என்பதையும் தகுந்த ஆதாரங்களோடு பிறகு விளக்கிப்பேசிய பின், தோழர் சுப்பையாக் கவுண்டரவர்கள், நாட்டிற்கு இத்தகைய நாடகங்கள் தான் வேண்டும் என்பதை வற்புறுத்திப் பேச, நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிதே முடிந்தது.

உண்மை நிறைந்த சொற்கள்! கோழையின் செல்வமும், ஏழையின் வறுமையும் ஒன்றுதானே!

படைச் செல்வம்!

இனி ஒரு அரசியலுக்குச்சிறந்த செல்வம் எது என்றால் அது எல்லா வகையிலும்—நிலம், நீர், வானம் எங்கும்—நிறைந்து துன்பங்களுக்கு அஞ்சாது எதிர்நின்று வெல்லும் படையாகும். அதுதான் அரசியலாரின் எல்லாச்செல்வங்களுக்கும் 'தலை' யானதென்கிறார் வள்ளுவர். இது மட்டுமா!.........

மக்கட் செல்வம்!

அரசியலின் உறுப்பாயமைந்த குடிமக்களுக்கு அழிவின்றி வழி, வழிவரும் செல்வம், அக்குடும்பத்தில் கூன், குருடு, நீங்கி ஆண்மை, அழகு, அறிவுடன் பிறக்கும் குழந்தைகளாகும். 'தம்பொருளென்ப தம்மக்கள்'—தம்முடைய உண்மையான செல்வம் என்று சொல்லத் தகுந்தவர்கள் தம்முடைய மக்களே, என்பது வள்ளுவர் உள்ளம். நாம்கூட ஒருவரைக் காணும்போது உங்களுக்கு எவ்வளவு செல்வம் இருக்கிறது? என்று கேட்காது, உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்றுமட்டும் தாராளமாக, ஆவலோடு கேட்கிறோமே, அதன்கருத்து என்ன? குழந்தைச் செல்வத்தின்பால் நாம் கொண்ட அவாவை, பற்றுதலைத் தானே அது எடுத்துக்காட்டுகிறது. அப்படியானால் இத்தகைய பண்பாடு வாய்ந்த நாம் குழந்தைகளைக் குரங்குகளைப்போல் பெற்றெடுத்து, நாய்களைப்போல்வளர்த்து, நரிகளைப்போல் திரிய விடுகிறோமே அதன் கருத்து என்ன? அதுவும் நம் பண்பாடா, பரிதவிப்பா?

தொண்டர்க்கு வேண்டிய செல்வம்!

இன்னும் ஒரு விழுச்செல்வம் இருக்கிறது. அது வியப்பிற்குரியது. ஆனாலும் உண்மையானது. அது என்ன? "வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' எதையும் விரும்பாத, போதுமென்ற மனமே பொன் என்றிருக்கின்ற 'உள்ளம்' ஒரு செல்வமாகும். இந்தச் செல்வம் எங்காவது எளிதில் கிடைக்குமா. அதுமட்டுமா அறிஞர்கள் கூட இச்செல்வத்தையடைய அரும்பாடு படவேண்டியிருக்கிறதே! அரிதில் முயன்று அடைய வேண்டியசெல்வம் "ஆசைப்படாத உள்ளம்'' என்பதுதானா? அட முட்டாளே "செல்வம்'' எதற்கு, அழிந்து போகவா, ஆசையை இழக்கவா? என்று சிலர் கேட்பது என்காதில் விழுகிறது. ஆம் இது 'விசித்திரமான, விநோதமான' செல்வம் தான்! ஆனால் அழியாதது; தன்னை அடைந்தோரையும் அழிய விடாதது. பிறர் துயர் துடைக்கும் தொண்டர்களுக்கு இதனினும் வேறு என்ன செல்வம் வேண்டும்?

பேதையர் நட்பில் பிரிவதே செல்வம்!

இன்னும் இதுபோலவே வேடிக்கையான செல்வம் இருக்கிறது. அது இதைவிட வேடிக்கையானது. காரணம், அச் செல்வத்தை நாம் தேடி அடையவேண்டாம். நம்மிடமிருந்து ஒழிக்கவேண்டியதை ஒழித்து விடுவதுதான் செல்வத்தையடையும் வழி! ஒழித்ததும் ஊதியம் கிடைக்கிறது. அது என்ன? அறிவில்லா வஞ்சகரின் நட்பை அறவேஒழித்துவிடுவதுதான் அது. பேதையரின் நட்பைப் பிரிபவிடுவதுதான் பெருஞ்செல்வம் பெறுவதின் அறிகுறி! இது வள்ளுவர் வகுத்த வழி! "ஊதியம் என்பது ஒருவற்கு, பேதையார் கேண்மை ஒரீஇவிடல்'' என்பது திருக்குறள்.

செல்வத்தைப் பற்றிய வள்ளுவரின் கருத்துக்களை முறையாகப் பார்த்தோம். கடைசியாக 'குறள்' நம் அழியாச் செல்வம்—தமிழர்களின் தனிப்பெருஞ் செல்வம்! எனவே அதைப்போற்றி, அதன் மூலம் நாம் நமது நல்வாழ்வை வகுத்துக் கொள்ள வேண்டும். சிந்திப்போமா? செய்வோமா?

"பூங்காவனம்''

திருச்சி முனிசிபல் கவுன்சிலர் தோழர் என்.சங்கரன் அவர்களின் குமாரத்தி தோழியர் பாரதிக்கு 22—1—49ம் நாளன்று பிறந்த பெண்மகவுக்கு 'பூங்காவனம்' என்று பெயர் சூட்டப்பட்டது. தாயும் சேயும் நலம்.

கழகப் பொதுக்கூட்டம்.

24-1-49 மாலை 7மணிக்குக் காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் சுப்பண்ணா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்களான அப்பாவு, இளம்வழுதி ஆகியோர் சிறிது நேரம் பேசியபின், தலைவர் பெரியார் அவர்கள் தற்கால நிலைமைகளைக் குறித்து மிக மிக விளக்கமாக 2 மணி நேரம் பேசினார்கள். நன்றி கூறலுடன் கூட்டம் இனிதுமுடிந்தது.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

டார். 3-ஆண்டுகளாய் எல்லா இரகசியப் போலீசாரும் அவரைத் தேடியலைந்தார்கள். ஆனால் பிடிக்கமுடியவில்லை. மலோடாவிடமிருந்த ஒரு பெரிய சாதுரியம் என்னவென்றால் துரோகிகள் சூழ்ச்சிக்கும் இரகசியப் போலீஸார்கைக்கும் அவர் அகப்படவே மாட்டார்.

அவர் அடிக்கடி தம்முடைய இருப்பிடத்தை மாற்றிக் கொண்டேயிருப்பார். சில வேளைகளில் மேல் மாடியிலே குடியிருப்பார். சில வேளைகளில் அடித்தளத்திலே வசிப்பர். என்றாலும் கடைசியில் 1916-ம் ஆண்டில் அவர் பிடிக்கப்பட்டு சைபேரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டார். அங்கு இர்குட்ஸ்கில் பல சுரங்கங்களில் மாதக்கணக்காய் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போதும் அவருடைய புரட்சிப்பிரசாரத்தை அவர் விடவில்லை. ஒரு நாள் மாலை, ஆஜர் ஜாப்தாவைப் படிக்கும்போது காவலாளர்கள் மலாடோவ் மறைந்து விட்டதாக அறிவித்தார்கள்!

செயிண்ட் பீற்றர்ஸ் பார்க்கில் அவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயம் மலாடோவ் லண்டனில் தன் நண்பர் ஸ்டாலினுடன் இருந்தார். ஸ்டாலின் மலாடோவை விட 10 வயது மூத்தவர். அங்கே ஒரு கட்சி மகாநாட்டில் இவர்கள் கலந்து கொண்டார்கள். லெனினும் மலாடோவும் முதல் முதலாக ஒரு கோயிலில் நடந்த இரகசியக் கூட்டத்திலேதான் சந்தித்துக் கொண்டனர்.

இருவரும் ருஷ்யாவுக்கு வந்து மிக மும்முரமாக யுத்த எதிர்ப்புப் பிரசாரத்தை நடத்தினார்கள். 1917-ம் வருஷம் ஏற்பட்ட புரட்சியின்போது மாலடோவுக்கு 27-வயது. கெரன்ஸ்கிதான் அப்போது அதிகாரத்திலிருந்தார். சைபேரியாவில் நாடு கடத்தப்பட்டிருந்த ஸ்டாலினும் கேம்னெப்பும் சைபேரியாவிலிருந்து ருஷ்யாவுக்குத் திரும்பினர். லெனின் உடனே ருஷ்யாவைவிட்டு வெளியே போக நேர்ந்தது. மாலடோவ் கட்சித் தலைவராககப்பட்டார். ஆனால் லெனின் மீண்டும் ருஷ்யாவுக்கு வந்ததும் மலாடோவ்வின் பெயர் சிறிது சிறிதாய் மறையவாரம்பித்துவிட்டது. அரசியல் துறையில் இரண்டாந்தரப் பேர்வழிபோல விளங்கலானார்.

ஸ்டாலின் அதிகாரத்துக்கு வந்ததும், மலாடோவ், கட்சியின் 2-வது காரியதரிசியாயும், ஸ்டாலினுக்கு வலது கரம் போலவும் விளங்கினார். இப்படி 28-ஆண்டுகளாய் விளங்கிவருகிறார். இவரால் ஸ்டாலினுக்கு எவ்வளவோ அரிய சாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

பயன்படுத்தும்போது உலகம் அவர்களின் அடிவருடிப் பணிகிறது. அதை அன்புக்கும், பணிவுக்கும் பயன்படுத்தினாலோ உலகம் அவர்களை ஆட்டிப் படைக்கிறது, ஆபத்தைக் கொடுக்கிறது!

அந்த எஜமானர் கோபாலராவ்... வயது முப்பது இருக்கும். ஒரு மனைவி, மூன்று குழந்தைகள்! அப்படி இருந்தும் காமம் தணியாத காரணத்தினால்...பாம்பின் வாயில் சிக்கிய தேரையானாள் பாவை லட்சுமி. வீட்டை விட்டு விரட்டிவிடுவேன், வேலையே கிடைக்காமல் செய்துவிடுவேன் என்று மிரட்டினார். சிறு பஞ்சு, புயலடித்த பிறகும் நிலைத்திருக்க முடியுமா!...காதலுக்குக்கூட அல்ல காமத்திற்கு இரையானாள்—கற்பு!—அது பறி போயிற்று! ஆனால் கோபாலராவ் தன் செய்கை முற்றிலும் காதலால் செய்யப்படுகிறதென்றும், அவளைக் கலியாணம் செய்து கொள்ளப் போவதாகவும் கூறினார்...தாகந் தணிந்து, மோகமும் முடிவதற்குள்—வரலட்சுமி-கோபாலராவின் மனைவி "விஷத்"தைக் கக்கத்தொடங்கினாள் "விஷயம்" தெரிந்துவிட்டதால்! கணவனின் கருத்தை மாற்றினாள் கொஞ்சிப்பேசியும், கோபங்காட்டியும்! அந்தப் பஞ்சை லட்சுமியை மிதமிஞ்சிப் பேசி ஏதோ திருட்டுக்குற்றம் சாட்டி வீட்டைவிட்டுத் துரத்தினாள். எங்கும் வேலை கிடைக்காதபடி செய்தாள். "விபசாரப்" பட்டம் சூட்டி ஊரெல்லாம் விளம்பரப்படுத்தினாள். இன்னும் அவள் சினம் ஆறவில்லை. ஊரை விட்டே துரத்தாவிட்டால், எல்லோருக்கும்தான் கெடுதல் என்று பறை சாற்றி வருகின்றாள்.

அய்யா மிரட்டியதற்குப் பயந்து இணங்கினாள் வாழ, தன்பெற்றோரைக் காக்கும் கடமையைநிறைவேற்ற! ஆனால் அம்மா மிரட்டியதோடன்றி விரட்டியே விட்டாள். முன்பே வெளியேறி இருந்தால்...இனி எண்ணி என் செய்வது...

*   *

கோபால்ராவ் வீட்டுக்கு அடிக்கடி வந்து போகும் கிருஷ்ணராவ் குளத்தங்கரையில் அன்று லட்சுமியைக் கண்டார். அந்தி வேளை, ஆநமில்லாதசமயம். கருணைக் கடைக்கண்ணைக் காட்டினார்...காதலென்று தான் அவரும் பேசினார்...

லட்சுமி திகைத்தாள் கற்பை விற்பதா...பாரத புத்திரி என்ற நினைப்பினால் அல்ல...ஊருக்குப்பயந்து, தன் மானத்தைக் காக்க எண்ணி...

மான்மா! பசிக்குமுன்னே, அது எம்மாத்திரம்? மான் துள்ளலாம்...ஆனால் புலிக்கு முன்னே...பதுங்கக்கூட இடம் தெரியாதே பயத்தில்...

மானத்துடன் நல்வாழ்வு வாழ எண்ணினால், லட்சுமி, ஏன்றைக்காவது தன்பெற்றோருடன் பசிக்கோ, ஒரு முழக் கயிற்றுக்கோ இரையாக வேண்டியதுதான். அவள் நிலை அப்படி இருந்தது...இப்பொழுது கிருஷ்ணராவுக்கு இடம் கொடுத்தால்...தாயும், தந்தையும் காப்பாற்றப்படுவார்கள். கடமை நிறைவேறும், தானும் பசியின்றி இருக்கலாம்.

கற்பு, பசி, மானம், உயிர் கடமை என்று ஒன்றன்பின் ஒன்றாகச் சுழன்றன. அங்கம், அங்கமாக வெட்டி எறிவதைவிட, விஷத்தையே குடிக்க ஒப்புக்கொண்டாள்...இடையே கிருஷ்ணராவ் தைரியம் சொன்னார்; சரி என்றாள்...அதன் பயன்...

*   *

படம் சுழன்று கொண்டிருந்தது. தமயந்தியை, நளன் கட்டி அணைத்தான். முதற் சந்திப்பைவிட, இந்த இரண்டாம் சந்திப்பில் அன்பு அழுத்தமாக இருந்தது. என்ன இருந்தாலும் பிரிந்தவர்கூடிய பெருமகிழ்ச்சி அல்லவா! "அன்பே! உன்னை இனி ஒருகணமும் பிரியேனடி' என்றான். 'நீயே என் உடல், பொருள், ஆவி அனைத்தும்..."நளன் பெருமூச்சு விட்டான். தமயந்தி தன்னை மறந்து, படம்பார்த்துக்கொண்டிருப்பவர்களையும் மறந்து நளனின் மடியிலே சாய்ந்தாள். அவன் அவள் தலையைக் கோதிக்கொண்டே குனிந்தான்...இதழ்கள் சந்திப்பதற்குள் காட்சி மாறியது...

கிருஷ்ணராவ், உதட்டில் புன்னகையைத் தவழவிட்டுக் கடைக்கண்ணால் லட்சுமியைப் பார்த்தார். இடது கையை அவள் தோளிலே போட்டுத் தலையை அவள் தோளிலே சாய்த்தார். "முடியப் போகிறதே, போவோமா" என்றார் மெதுவாகக் காதுக்குள்! அவள் இதழ்களும் விரிந்தன—உதிர்ந்த மொட்டுச் சிறிது விரிந்து காணப்படுவதுபோல இருந்தது அது. புன்னகையும், மின்னல்போலத் தோன்றி மறைந்தது. அதிலே காதல் இல்லை, காமம்கூட இல்லை... ஆனால் அப்பா, அம்மாவைக் காப்பாற்ற வேண்டுமே என்ற இரக்கம், கடமையுணர்ச்சி இருந்தது. அதைக் கவனிக்க வக்கீல் கிருஷ்ணராவுக்கு நேரம் எங்கே இருக்கிறது. உடற்கொதிப்பு அதிகரிக்கப்பெற்ற அவர், லட்சுமியின் கையைப் பிடித்துக் கொண்டு எழுந்தார்......

இனி நாய் எலும்புத்துண்டைக் கவ்விவிட்டால்...... தனி இடம் தேடி ஓடுகிறதே......அதுபோல......

அவள் கண்களிலே தன் பெற்றோரின் ஏழ்மை உருவங்கள் தெரிந்தன,

காந்தி ஆஸ்டல்!

காரைக்குடி ஜன 23.

அமராவதிபுதூர் மகளிர் இல்லத்தின் சார்பில் அனாதைப் பிள்ளைகளுக்கு உணவு உடை கொடுத்து படிப்பும், தொழிலும் கற்றுக் கொடுக்கும் உத்தேசத்துடன் "அனாதை விடுதி" என்கிற ஒரு பிரிவு நேற்றுப் புதிதாக ஆரம்பிக்கப் பெற்றது. பலர் பாராட்டிப் பேசினார்கள். கோட்டையூர் க.வீ.அழ.மு. இராமனாதஞ்செட்டியார் தம் புதல்வியின் நினைவாக இதற்கு ரூ. 3500 தந்துதவினார். தோழர் முருகப்பா அனைவருக்கும் நன்றி கூறினார்.

தஞ்சையில் சு. ம. மணம்.

தஞ்சை, கரந்திட்டைக் குடியில் 12-12-48 ஞாயிறன்று சப்-ரிஜிஸ்ட்ரார் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் தோழர்களான டி. எ. பாலகிருஷ்ணனுக்கும் முடிகொண்டான் பாலகான ஆசிரியர் மகள் கனகாம்புஜத்திற்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. பல தோழர்கள் பாராட்டிப் பேசினார். மணமகன் நன்றி கூறினார்.

நாமக்கல் வன்னியர் பகுத்தறிவு வளர்ச்சி கழகத் திறப்பு விழா.

ஷை கழகக் கட்டிடத்தை 30-1-49 ஞாயிறன்று மாலை 3-மணிக்கு சேலம் கல்லூரி விரிவுரையாளர் தோழர் சி. திருமலை திறந்து வைப்பார். பல தோழர்கள் பேசுவார்கள்.

காதுகளிலோ முன் கோபால்ராவ் பேசிய காதற் பேச்சுக்கள் ஒலித்தன. கருத்தோ கடமையிலே மூழ்கி இருந்தது. கற்பைப்பற்றிச் சிந்திக்க அதற்கு நேரமில்லை. எனவே கால்கள், காதல் பேசி காமத்தைத் தணித்துக்கொள்ள இழுத்துச் செல்லும் ராவின் பின்னே சென்றன!

சற்று தூரத்தில் யாரோ ஒருசிறுவன் "எத்தகைய துன்பம் வந்தாலும்' உச்சிமீது வானம் இடிந்து விழுந்தாலும், சூரியன் மேற்கே உதித்தாலும் எங்கள் பாரத நாட்டு—இந்திய நாட்டுப் பெண்கள் கற்பை விலைக்கு விற்கமாட்டார்கள்" என்று படத்திலே கேட்டதை உளறிக்கொண்டிருந்தான். அதைக்கேட்க தனக்குக்கூட பிடித்தமில்லை என்பதுபோல ஒருநாய் குரைத்துக்கொண்டிருந்தது.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

போயிருக்கிறாரா...?

சின்னான்:- [துக்கத்தோடு] ஊ...ங்! ஆகாயக் கப்பலிலே எல்லாம் பறந்த கட்டைதான் அது! கடைசியாப் பாடைமேனும் வைச்சு நாலு பேரு தூக்கிக்கினும் போயிட்டாங்க....ஊஹூம் உஹூம் ஹூம்...

வேவா:- அடடே...விஸ்வன் திடீருனு செத்துப் போயிட்டாரா...

சின்னான்:- இல்லீங்க... அவராச் சாவலீங்க...ஆவாச் சாவுங்க!! எந்தப் பாவிங்களோ... டு...ங்கியினாலே சுட்டுப்புட்டா னுங்க!

வேவா:- அடப்பாவமே! அப்படியானால் விமலாவின் கதி என்னாச்சு?

சின்னான்:- அதுக்கு அன்னையிலிருந்தே பைத்தியம் பிடிச்சுப் போச்சுங்க...

வேவா:- அய்யோ பாவமே! ஏனப்பா சின்னான்...! விஸ்வனை யார் சுட்டிருப்பாங்கனு நினைக்கிறே...?

சின்னான்:- எனக்கென்னாங்க! சோசியமா தெரியும்? அப்படியே தெரிஞ்சுச்சுன்னா...அந்தப் பயலைச் சும்மாவா விட்டுடுவேன்...?

வேவா:- அடச் சோசியருக்குத்தான் என்ன! கொலை செய்தவனைக் கண்டுபிடிக்கவாமுடியும்? அதெல்லாம் சும்மா வயிற்றுப் பிழைப்புக்கான வழியப்பா! அப்படிச் சோசியமெல்லாம் உண்மை என்றிருந்தால், நம்ம அரசாங்கத்திலே ரகசியப் போலீஸூக்குப்பதிலா சோசியர்களையே வைத்து மாதம் அய்நூறு, ஆயிரம் என்று சம்பளம் கொடுக்கமாட்டாங்க? எங்களையேன்...இல்லை இல்லை! இந்தச் சோசியர்களை யேன் இப்படி...வீதிக்கு வீதி அன்னக்காவடிங்களாய்த் திரிய விட்டிருக்கப்போறாங்க?

சின்னான்:- ஒகோ! அப்படின்னாச் சோசியமெல்லாம் பொய் தானுங்களோ...? ஆமாங்க ஆமாங்க! இல்லையினா...இந்தச் சோசியருங்களுக்கெல்லாம் 'ஜீயேடி' உத்தியோகமாவது கொடுத்திருப்பாங்களே.........?

ஆமாங்......! நீங்க யாரு எவருனு தெரிஞ்சுக்காமலே! நான் பாட்டுக்கு என்னனமோ பேசிக்கினே போறேனுங்களே......

வேவா:- அடச்சே! கடைசியா என் மேலேயே சந்தேகப்பட ஆரம்பிச்சுட்டாயா.........? உம். சொல்கிறேன் கேள்!

சின்னான்:- ஆ...ங்! அப்படிச் சொல்லுங்க!

வேவா:- விஸ்வன் இருக்கிறாரே......?

சின்னான்:- அவரு இல்லீங்க! அவருதான் செத்துப்போயிட்டாருனு சொன்னேனுங்களே...!

வேவா:- விமலா......?

சின்னான்:- இருக்குது! ஆனா... பைத்தியம்னா பிடிச்சிருக்கு......!!

வேவா:- பைத்தியம் மாதிரியிருக்கோ......?

சின்னான்:- பைத்தியம் மாதிரி என்னாங்க? பேச்சு, நடை, உடை பாவனை எல்லாம் சுத்தப் பயித்தியமேதானுங்கன்னா......!

வேவா:- விமலா பேசக்கூடச் செய்யுதா......?

சின்னான்:- உம்! அது என்னத்தைப் பேசுச்சுங்க! சும்மா........ 'ராஜன், ராஜன்னு' உளறிக்கிட்டே இருக்கும்!

வேவா:- ராஜன் ராஜன்னு...... உளறுதா...?

சின்னான்:- என்னங்க! ஒரு மாதிரியா யோசிக்கிறீங்க? அட உங்க பேரைக் கேட்க மறுபடியும் மறந்துட்டேனுங்களே......

வேவா:- ஏன்பா சின்னான்! விமலா 'ராஜன் ராஜன்' என்று மட்டுந்தான் சொல்லுதா! அல்லது வேறு யாருடைய பேரையும் சொல்லுதா?

சின்னான்:- முதலிலே உங்க பெயரென்ன? அதைச்சொல்லுங்கோ! அப்புறந்தான் மறுபேச்சு.

வேவா:- என் பெயர் வேவா.

சின்னான்:- [ஆச்சரியமாக] என்ன! வேவா? அடடே........ உங்க பேரைக்கூட அது அடிக்கடி சொல்லுதுங்க!

வேவா:- என் பேரைக்கூடச் சொல்லுதா? அப்படியானால், சின்னான்! சற்று வருகிறாயா போய்ப் பார்க்கலாம்?

சின்னான்:—யாரை?

வேவா:- விமலாவைத்தான்!

சின்னான்:- சேச்சே! அது கிட்டே நான் வரமாட்டேனுங்க! அது சும்மா 'உம்னு' இருந்தாலும் இருக்கும்! ஒரு குணம் வந்து எந்திரிச்சு...... ஒரு போடுபோட்டுச்சோ........அவ்வளவுதான்! முதுகு வெள்ளரிப் பழம்போல விரிஞ்சுபோகும் விரிஞ்சு! நூகூப்! நான் வரமாட்டேன். நீங்கதானா போங்க......நல்லா......... வாங்கு வீங்க!

[என்றுகூறிப் போய்விடுகிறான்]

வேவா:- ஊம், சரி போய்ப் பார்ப்போம்! நடக்கிறது நடக்கட்டும்!

காட்சி. 29.

[முதலியார் வீடு.]

உறுப்பினர்:- விமலா, முதலியார், பத்மா, வேவா.

கதை அமைப்பு:- [விமலாவின் உளறல்களிலிருந்து வேவா சில உண்மைகளை அறிகிறான்.]

விமலா:- [புத்தி சுவாதீனமிழந்து, பித்துப் பிடித்தவள் போல் விழித்துக் கொண்டிருக்கிறாள்.]

பத்மா:- [முதலியாருக்குப் பக்கத்தில் துக்கத்தோடு நின்றுகொண்டிருக்கிறாள்.

முதலியார்:- அம்மா விமலா! அய்யோ! பேயடிச்சுப்போட்ட மூஞ்சி மாதிரி இருக்கே...? இந்தச் சண்டாளி பத்மாவின் பேச்சைக் கேட்டல்லவா? உனக்கு இந்தக் கதியை உண்டாக்கி விட்டேன்!

பத்மா:- அவளுடைய தலைவிதிக்கு நானென்ன செய்வேன்? என்மீதேன்வீண்பழிசுமத்துறீங்க?

வேவா:- [வரும்போதே] அவனன்றித்தான் ஒரு அணுவும் அசையாதே...?

முதலியார்:- நீ யாரப்பா...! புதிதாக இருக்கே...?

வேவா:- ஆமாங்க! புதிதேதானுங்க! உம்...விமலா ஏன் ஒரு மாதிரியா இருக்கு?

முதலியார்:- என்னப்பா! புதிதென்கிறே! என் மகள் பேர் சொல்லிக் கேட்கிறே....எனக்கொன்றும்...புரியலையே...?

பத்மா:- [முதலியாரைத்தனியே அழைத்து] என்னாங்க! இந்த ஆளையும், பேச்சையும் பார்த்தா...இவனும் ஒரு பைத்தியக்காரனைப் போலவே இருக்கிறானே! ஒரு வேளை! பைத்தியம், பைத்தியத்தைத்தேடி வந்திருக்கோ! எனக்குப் பயமா இருக்கே?

முதலியார்:- நல்ல வேளையாப் போச்சு! உனக்கும் பைத்தியம்னு சொல்லித் தொலைக்காமேயிருந்

தியே...உம். நல்லநேரத்தோடு உள்ளே போய்த் தொலைடி!

பத்மா:- [உள்ளே போய் விடுகிறாள்.]

வேவா:- [விமலாவின் அருகில் சென்று] விமலா உனக்கு விஷயந் தெரியுமோ...! விஸ்வனை ராஜன்தான் சுட்டு விட்டானென்று போலீஸார் ராஜனை அரஸ்ட் செய்திருக்கிறார்களே?

விமலா:- ஆ...! ராஜன் அரஸ்டா...? அஹ்றஹற்ஹறஹ்ஹறஹ்றஹா...ஆஹ்றஹற்ஹறஹ்றஹா...ஆஹ்றஹற்ஹறஹ்றஹற்றஹா......

முதலியார்:- என்ன! ராஜனா விஸ்வனைத் தாசிவீட்டில்போய்ச் சுட்டான்? அப்பா! நீயார்? ராஜன் உனக்கு என்ன வேண்டும்? விமலாவை உனக்கு எப்படித்தெரியும்?

வேவா:- ஒருகாலத்தில் நாங்கள் மூவரும் கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்த தோழர்கள்!

விமலா:- [அப்பாவை ராஜன் என்று பாவித்துப் பரய்ந்தோடி] ஹலலோ...மை டியர் ராஜ்! அஹ்றஹற்ஹறா...மிஸ்டர் வேவா...நீர் ஒரு சங்கோசப்பேர்வழி...உமக்கு வெட்கமில்லை எங்களை இப்படி நடுத் தெருவில் பார்ப்பதற்கு... அஹ்றஹற்ஹறா...ஆஹ்றஹற்ஹறா-மிஸ்டர் ராஜ் நீங்கள்தான் நடேசா மில்லுக்கு ஹெட் கிளார்க்காம்... விஸ்வனை என்ன கேட்பது... ஆஹ்றஹற்ஹறா...மிஸ்டர் வேவா! நீரே விநாயகர்! உமக்கு வ்ரப் போகும் துப்பறியும் உத்தியோகமிருக்கிறதே....அதுதான்யானை... மிஸ்டர் ராஜ் சுப்ரமணியர்...நான்தான் வள்ளி...கல்லூரியே நாரதரடி நாரதர்...ஆஹ்றஹற்ஹறா...

முதலியார்:- அய்யய்யோ...! என்னங்கசார்! உங்களைக் கண்டவுடனே...பைத்தியம் முத்திக் கொண்டே போகிறதே...?

வேவா:- முதலியார் சார்! கொஞ்சம் பொறுங்க! உம். விமலா! நீ சொல்லம்மா உன் சங்கதியை...

முதலியார்:- அடப் பைத்தியத்துக்கிட்டே போய் என்னப்பாக் கேட்கிறே? எல்லாச் சங்கதியையும் நானே சொல்கிறேன் கேள்! [விமலாவை நோக்கி] நீ ஒன்றும் சொல்லவேண்டாம் பேசாமே உள்ளே போயி இரு போ...[வேவாவிடம்] ஏதோ! என் இளையாளுடைய பேச்சைக் கேட்டு நான்தான் வலுக்கட்டாயமாய் விமலாவை விஸ்வனுக்கே கலியாணம் செய்து கொடுத்து விட்டேன். இப்படி எல்லாம் வருமென்று தெரிந்தால், அவள் விருப்பப்படி ராஜனுக்காவது கொடுத்துத் தொலைச்சிருக்கலாம்...

விமலா:- புதிருமில்லை கிதிருமில்லை! உன் தம்பி விஸ்வன்...மில்லில் உள்ள ரெண்டு லட்சம் ரூபாய் நூல் பேல்களைத் திருட்டுதனமாகப் பிளாக் மார்கட்டில் விற்றுவிட்டுப் போலீஸில் மாட்டிக் கொள்ளப் பார்த்தான்... ஆனால்...துர்ப்பாக்கிய ராஜன். நிரபராதி! அவனைத்தான்எல்லாருமாச் சேர்ந்து போலீஸில் மாட்டி வைத்து விட்டோமடி பத்மா பத்மா...ஆஹ்றஹற்ஹறஹ்றஹற்ஹறா...

முதலியார்:- [எவ்வளவோ முயன்றும் விமலா வாயை மூட முடியாததினால், மிகவுங் கோபத்தோடு] இந்தா பைத்தியம் பிடிச்ச கழுதை நீபாட்டுக்குக் கிறுக்குத்தனமாவாயிலே வந்தபடி எல்லாம் உளறிக்கிட்டிருந்தீன்னா! வந்திருக்கிறமனிதர் என்னை அல்லவா தப்பா நினைத்துக் கொள்வார்...? ஆங்??

வேவா:- சேச்சே...! முதலியார்வாளைப்பற்றி அப்படி எல்லாம் நான் நினைப்பேனா...? அதுகிடக்குதுங்க பைத்தியம்!

முதலியார்:- [சமாளிப்பாக] ஆமாம் ஆமாம்...பைத்தியம்!!

வேவா:- ஆனால்...நீங்கள் மட்டும் கொஞ்சமும் ஒளிவு மறைவு இல்லாமல், அந்த பிளாக்மார்கட் வியாபாரத்தில் யார் யார் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லிவிட்டீர்களேயானால் போதும்! அதுவும் உங்கள் நன்மைக்காகத்தான் கேட்கிறேன்! சும்மா சொல்லுங்க சார்...!

முதலியார்:- யாரப்பா நீ! பெரிய ஆளாயிருப்பாய் போலிருக்கே...? உம். மனுசனுடைய யோக்கிதை என்ன? அந்தஸ்த்தென்னான்னு தெரிஞ்சுக்காமே! அந்தப் பைத்தியம் பிடித்த கழுதை உளறியதை நம்பி! என்னைப் பார்த்தா...அந்தக் கேள்வியைக் கேட்டே...? சரி சரி. போப்பா வெளியே! மகா யோக்கியரு—பைத்தியம் பிடித்த கழுதை! போகழுதை உள்ளே....

[என்று விமலாவை உள்ளே தள்ளிக் கொண்டு போகிறார்—வேவா வெளியே போகிறார்.]

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளலாமா? கடவுள் அனைவருக்கும் பொதுவானவர்தானே! அப்படியிருக்கப் பெரும்பகுதியினராகிய நம்மை இழி சாதியினர்; எம்மைத் தொட அருகதையற்றவர் என்று கூறும் அந்தக் கடவுளுக்கு கோவில்கட்டி நாம் ஏன் கும்பிடவேண்டும்?

அன்றையக் கலைக்கோட்டங்கள் இன்று ஆரியரின் அட்டகாசத்திற்கிடமானதோடில்லாமல், காதற்கோட்டங்களாகவும், காமக்கோட்டங்களாகவும் மாறிவிட்டன.

பெற்ற குழந்தைகளுக்கு வயதுவந்தும் மணம் செய்விக்கப் பணம் இல்லையே என்று பெற்றவன் கதறும் இக்காலத்தில் உயிரற்ற—உணர்ச்சியற்ற விக்கிரகங்களுக்கு வருடம் தவறாமல் கல்யாணம்—களியாட்டம்-உற்சவம் ஒன்றிற்கும் குறைச்சலில்லை. உற்சவங்களுக்காகச் செலவழிக்கும் பெருந் தொகையைக்கொண்டு பாமரர்களைப் பகுத்தறிவாளர்களாக்கினால் நம் நாடு முன்னேற்றமடையாதா? கடவுள் கோபங்கொண்டு நாட்டை அழித்துவிடுவாரா என்று ஒரு வருடம் உற்சவத்தை நிறுத்தித்தான் பார்ப்போமே! ஆக்கும் வேலையைச் செய்யாவிட்டாலும் அழிக்கும் வேலையையாவது மேற்கொண்டு நம்மைக் கரையேற்ற மாட்டாரா? சே! மறந்து பெரிய ஆசைப்பட்டுவிட்டேன்! இழி சாதியினராகிய நமக்கு எப்படிக் கிட்டும் சுவர்க்கவாசம்!

உற்சவங்களாலும், விழாக்களாலும் மக்களுக்கு ஏதாவது மனமாற்றம் ஏற்படும்படியான கண்காட்சிசாலை—பகுத்தறிவு நிலையங்களையாவது ஏற்படுத்துகிறார்களா? அதுதான் இல்லை, அடி, திருட்டு, கொலை எல்லாம் நடப்பதோடில்லாமல் மூடபக்திமான்களாகி எதையும் சிந்திக்கும் சக்தியற்றவர்களாக்கி விடுகிறார்கள்.

கடவுளிடம் வரம் பெற்றவர்களென்றுகூறும் அவர்களுக்கு உழைத்தால்தானே பணத்தின அருமை தெரியும்.

இந்நாட்டில் கணக்கெடுத்துப் பார்த்தால் குறைந்தபட்சம் ஒரு தெருவிற்கு ஒரு கோவில் வீதமேனும் தேறும். இத்தனை கோவில்களிலுமுள்ள சிலைகளுக்கும்—சிலைகளின் பேரைச்சொல்லி மணியடித்து வாழும் பூசாரிகளுக்கும் காணிக்கையாக்கப்படும் பணம், ஒரு பெரும் காசுக் கடையின் மூலதனத்தையே மிஞ்சிவிடும்.

கற்சிலைகளுக்குப் படிப்படியாக பாலைவார்த்து வீணாக்கப்படுவதால் நம் நாட்டுப் பச்சிளங்குழந்தைகள் பருகப் பாலின்றி பதறி மடிவதில் ஆச்சரியமில்லை. இதேபோல் பழங்கள், தயிர், வெண்ணை மற்றும் பல உயர் பொருள்களைப் பெருவாரியாக

எமது தீர்ப்பு

பொன்னி

பொங்கல் மலர்

விலை ரூ. 3—12—0.

[கிடைக்குமிடம்:- பொன்னி அலுவலகம், தபால்பெட்டி 39, புதுக்கோட்டை]

இவ்வாண்டு பொங்கல் நன்னாளை ஒட்டி, பொன்னி நல்லாளும் தன்னியல்புக்கேற்ப தமிழ்ப்பொங்கலாக்கி அளித்திருக்கின்றாள்; அழகியஆர்ட் தாளில் கருத்தைக் கிளறும் எழுத்தோவியங்களுடனும், கண்ணைக்கவரும் மூவண்ணப் படங்களுடனும்!

பெரியார், அண்ணா ,பாரதிதாசன் இவர்களின் மூவண்ணப் படங்களும், கருத்தோவியங்களும் மலரை அணி செய்கின்றன. மு.கருணாநிதி, பாண்டுரங்கன், கண்ணதாசன், இராதாமணாளன் போன்றாரின் கதைகள், சுவைக்கவும் சிந்திக்கவும் ஏற்றன. டி. கே. சண்முகம், பழ. இராமசாமி, மெ. சுந்தரம், நாரணதுரைக்கண்ணன் போன்றவர்களின் கட்டுரைகள் படிக்கவேண்டியவை. அறிஞர் அப்பாத்துரை தமிழ் இலக்கியச்சிறப்பை எடுத்துக் காட்டுகிறார். அவ்விலக்கியச் சோலையைச் சார்ந்த தினைப்புனத்திற்கு விசு. திருநாவுக்கரசு நம்மை அழைக்கிறார். தமிழ் இளைஞர்கள் போய்வர வேண்டிய இடம்!

"தமிழை அலங்கரிக்கும் சிற்பிகள்" நல்லமுயற்சி! சற்று விரிவாகவும், விளக்கமாகவும் இருக்கலாம். "ஆண்டவன் துணை" நமக்குஉயர்ந்த கருத்தை உணர்த்தவில்லை. "மாட்டுத்தொழுவில்" வேண்டாத பகுதி.

பொன்னிக்கு இது இரண்டாவது முயற்சி என்பதை எண்ணும்போது, காணப்படும் குறைகள் மிக, மிக அற்பம். திராவிடக் கழகத்தினரும், சிறந்த மலரை வெளியிடுவர் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு!

குஞ்சு

பொங்கல் மலர்

ஆசிரியர்: கே. எம். பாலசுப்ரமணியன் சென்னை.

சிறுவர்களின் இதழ். ஆனால் வாலிபர், வயதானவர் யாவருமே படித்தும் பயன்பெறத்தக்கது. பாரதிதாசன் கவிதைகளும், பெரியார், நம் பிரதம மந்திரி, கல்வி மந்திரி ஆகியோரின் பாராட்டுதல்களும் இடம்பெற்றிருக்கின்றன. முகப்பட்டையைத் தவிர, உள்ளுக்குள் சிறுவர்களின் மனங்கவரத்தக்க படங்கள் இல்லாததை ஒரு குறை என்றே சொல்லவேண்டும். ஆனால் ஒன்றுக்கும் உதவாதவற்றை-வாழ்வில் நஞ்சைக் கலப்பனவற்றை எழுதித் தள்ளிப் பணத்தைக் குவிக்கப் பலர் போட்டியிடும் இக்காலத்தில் "குஞ்சு" போற்றி, வாங்கி, வளர்க்க வேண்டிய இதழ்! தம்பி, தங்கைகள் இதை மறந்துவிடவேண்டாம்.

1. அறப்போர்
2, இலட்சிய வரலாறு.

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை. விலை தனித்தனி ரூ. 1—0—0. (கிடைக்குமிடம்: திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி)

கருத்தைக் கிளறும் வகையில் எழுதப்பட்ட அண்ணாவின் எழுத்தோவியங்கள் சிலவற்றைத் தொகுத்துக் கண்ணைக் கவரும் வகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

1. "அறப்போர்" இந்தி எதிர்ப்பின் காரணங்களைக்காட்டி அதன் அவசியத்தை அறிவுறுத்தி, அன்னை தமிழைக் காக்க அனைவரும் வாரீர் என அழைக்கிறது. இன்பத் திராவிடத்தில் அந்நிய ஆதிக்கம் அழிய, மொழிப் போராட்டம் எவ்வளவு முக்கியமானதென்பதை விளக்கவைக்கின்றது. "இந்தி கற்றால் நல்லதுதானே" என்று இழுப்போருக்கு இது நல்ல மருந்து.

2. திராவிட மக்களின் கண்ணீரால் எழுதப்பட்டிருக்கும் "திராவிட நாடு, திராவிடருக்கே" என்ற இலட்சியம், என்று தொடங்கியது? எவ்வாறு வளர்ந்தது? ஏற்பட்ட இடையூறுகள் என்ன? என்பதை எல்லாம் விரித்துக் கூறி நம்மைத் தூத்துக்குடி வரைக்கும் அழைத்துச்செல்கிறார் அண்ணா, அழகிய நடையில்! மரணசாசனம் தயாரித்துவிட்டு வெளிவரும் மாவீரர்களுக்கு "நம் இலட்சியம் நிறைவேறுவது நிச்சயம்" என்ற உறுதிமொழி தருகிறார் தளபதி. படித்துப் பயன் பெறவேண்டிய நூல்.

குறள் காட்டும் தெய்வம்— உழைப்புச் செல்வம்

(கலைச்செல்வ நிலையம் 33, நயினியப்ப நாய்க்கன்தெரு, சிந்தாதிரிப் பேட்டை சென்னை 2. விலை 0-3-0)

"பிலி"யார் "கிராமீய" நடையில் எழுதிய சின்னஞ்சிறு நாடகம். குறட் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இம்முறையில் இத்தகைய நூற்கள் வெளிவருவதைத் தமிழ்நாடு வரவேற்கவேண்டும். இன்னும் சிறிது விறுவிறுப்புத் தோன்றும்படியும், படிப்பவர்மனதில் குறட் கருத்துப்பதியும் படியும் எழுதப்படவேண்டும் என்பது நம் ஆலோசனை.

கவிக்கன்னி

(விலை 0—2—0 ஆசிரியர் நல்லை அ. இளங்கோவன். கடலை போஸ்டு கோவில்பட்டி எஸ். அய். ஆர்.)

சித்திரையில் வெளியாக இருக்கும் இம்மாத இதழின் அறிமுக மலர் இது. வளர்ந்துவரும் கவிதைப் பயிரில் களையெடுக்கவும், தமிழ் நீர்பாய்ச்சவும், இந்தி எருமையை எதிர்த்து விரட்டவும் இம்மலர் பயன்படவேண்டும். இந்நன் முயற்சியில் இறங்கியிருக்கும் நண்பர்களை வாழ்த்துகிறோம், வெற்றிபெறவும், வேகமாக முன்னேறவும். "அண்ணல்"

கோவில்களில் வீணாக்கப் படுதலே இந்நாட்டு வறுமைக்கு மற்றொரு காரணமாகும். பகுத்தறிவாளர்களனைவரும் நாட்டின் நலனுக்காக இத்தகைய பிற்போக்கான புரட்டுகளைப் போக்க முற்படுவது போற்றற்குரியது தானே! இத்தகைய நற்பணிகளைச் செய்யும் நம் கழகத்தின் மீது ஆட்சியாளர்கள் ஏன் அடக்குமுறையை வீசவேண்டும்?

ஆரியர்களால் ஒரு சிலை செதுக்க வகை போதா விட்டாலும், கலைஞனின் கைத்திறமையைப் பிறர் கண்டு கொள்ளாவண்ணம் எண்ணைப் பிசின் ஏற்றி சிலையை அவலட்சணப் படுத்தி விடுகிறார்கள். அக்கலைஞரின் வழி வந்த நமக்கு அச்சிலையைத் தொடவோ—அருகில் செல்லவோ அனுமதியில்லை. பல அடி தூரங்களுக்கப்பாலிருந்து காணவே பார்ப்பானின் தயவு வேண்டும். எப்படியிருக்கிறது பிழைக்க வந்தவனின் சதிச்செயல்?

நம் நாட்டின் துன்ப நிலைமாறி நல்நிலை ஏற்படவேண்டுமானால் உடனடியாக நம் நாட்டிற்குத் தனியாட்சி ஏற்படவேண்டும். ஏற்பட்டாலொழிய இத்தகைய ஏமாற்று வித்தைக்கும், ஆரிய ஆணவத்திற்கும் அழிவோ, முடிவோ ஏற்படாது. தனியாட்சி ஏற்பட்டால் தான் ஆலயங்கள் பகுத்தறிவு நிலையங்களாகவும், பல்கலைக் கழகங்களாகவும் மாறும்—மாற்ற முடியும்.

கடவுள்களின் பெயரைக்கூறி நம் நாட்டில் நடக்கும் ஏமாற்று வித்தைகளைப் போல் இது வரை எந்நாட்டிலும் நடந்திருக்காது—நடக்கவும் நடக்காது. திராவிடத் தோழியர்களே! இனியாவது மதியை மழுங்கடிக்கும் ஆலயங்களுக்குள் நுழையாதீர்கள். அழியட்டும் ஆரிய ஆணவம்!

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE